கவல் கொள்ளாரே !

வெட்டுகின்ற வெட்டொன்ருய் துண்டிரன
மெய்க்கருத்தை விளங்கப் பேசி
முட்டுகின்ற இடர்மலேக்கும் முள்கின்ற
பெருஞ்சுழற்கும் துணிந்தார், மூடர்
கட்டுகின்ற பொய்யுரைக்கும் அவிழ்க்
புளுகுரைக்கும் கயவர் பாங்கில்
கொட்டுகின்ற வாய்ப்பறைக்கும் செவி
விடையிறுக்கார்; கவல்கொள் ளாரே! [

தி. பி. ௧௯௯௯ள. மடங்கல் (ஆவண

ரூ0 காசு

"கெஞ்சுவதில்லை பிறர்பால் ! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை," எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே !

சுவடி 4 | ஆவணி தி. பி. ௧௯௯௭ (1966 ஆகஃச்டு) | ஓலை 7

இழிதகை நூல்கள்

நம் நாட்டைப் பிடித்துலுக்கும் பலவகைத் தொழு நோய்களுள், இக்கால் கட்டுக் கடங்காமல் மிகுந்து தலைவிரித்தாடும் காமவெழுச்சிக் கழிசடைச் செயலும் ஒன்று. வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியில் போய் வருவதற்குள் சுவர்தொறும் ஒழுங்கற்றுத் தாறுமாறாக ஒட்டப் பட்டுக் கிடக்கும் திரைப்படச் சுவரொட்டிகள் முதல், பொத்தகக் கடைகளில் வண்ண வண்ணமான இழிந்த அட்டைப் படங்களுடன் குவிந்து கிடக்கும் கையடக்கமான பொத்தகங்கள் வரை எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இத்தகைய காமக்களியாட்டங்களையும் கண்டு உள்ளம் வெதும்ப வேண்டியுள்ளது.

பொறுப்பாசிரியர்:- பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்:- தங்கப்பா.
உரிமை, வெளியீடு : தாமரை, உலக முதல்வி.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

வெளிநாடுகளில் எல்லை மீறிப் போயிருக்கும் இந்தக் காம விளைச்சலை நேரில் போய் அறுவடை செய்துகொண்டு வந்து, இந்த நாட்டின் ஏமாளிகளின் மூளைச் சேற்றிலும் நரம்புத் தளர்ச்சி மிகுந்தவர்களின் குருதிச் சகதியிலும் வித்திட்டு வேளாண்மை செய்யும் செல்வர் சிலரின் திருவிளையாடல்கள் எல்லை மீறிப் போயிருக்கின்றன. செய்தித்தாள்கள், திரைப்படங்கள், புதினங்கள், சிறுசிறு நாட்குறிப்புகள், நாள்காட்டிகள் பணப்பையின் உள்ளுறைகள், மற்றும் உள்ள அழகுப் பொருள்கள் ஆரவாரக் குப்பைகள் முதலிய எல்லா வகையான பொருள்களிலும் இந்தச் சீர்கேடான திருவுருவங்கள் பளபளக்கும் வண்ணத்தோடும் பணம் பறிக்கும் எண்ணத்தோடும் பதிக்கப் பெறுகின்றன. அவற்றை வாங்கி அகங்களிக்கும் பள்ளி இளைஞர்களும் கன்னிப்பெண்டிரும் கோடான கோடி. இத்தனை வெறியாட்டங்களுக்கும் இடமளித்துக்கொண்டிருக்கும் அரசினர் தம் அறியாமையைப் பார்த்துச் சிரிப்பதா அழுவதா என்று தெரியாமல் மனம் குமுறிப் போயிருக்கும் நல்லவர்களும் இந்நாட்டில் ஒரு சிலர். இவர்கள்தம் நெஞ்சக் கசிவுக்கு விடிவே இல்லையா என்றெண்ணும் அளவிற்கு நாளுக்கு நாள் இந்தக் கழிசடை எண்ணங்கள் மக்களிடம் பெருகி வருகின்றன.

அண்மையில் வேலூர் தன்மதிப்புக் கழகத்தார் அமைச்சர்களுக்கும் மற்றுமுள்ள இந்த நாட்டின் பெரியதனக்காரர்களுக்கும் திறவை மடல் ஒன்றை விடுத்திருக்கின்றனர். அம்மடலில் பள்ளி மாணவர் தம் பிஞ்சு உள்ளங்களில் வேரோடிப் போயிருக்கும் இத்தகைய காமக் கழிசடை எண்ணங்களைப் பற்றியும் அவர்தம் அறநூற்களின் நடுவில் புகுந்து இடம் பிடித்துக்கொண்டு வரும் இழிதகை நூற்கள் சிலவற்றைப் பற்றியும் மனப் புழுக்கத்தோடு எழுதி, அவற்றிற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கொண்டுள்ளனர். இந்நாட்டின் அதிகார நாற்காலிகளில் அமர்ந்து, சிறுவர்கள் மறைத்து வைத்துப் படிப்பதாகக் கூறும் அதே நூற்களைக் கவனமாகத் தாமும் படித்து அற்றை நாள் இளமை நினைவுகளிலும் அவற்றில் அச்சிடப் பெற்றிருக்கும் அம்மணப் பெண்டிர் தம் வளமை உடல் வாளிப்புகளிலும் மிதந்து கொண்டிருக்கும் அத்தகைய அதிகாரிகளைப் பற்றி அறிந்திருந்தால், வேலூர் தன் மதிப்புக் கழகத்தார் தம் வேண்டுகோள் எத்தகைய பயனையும் விளைவிக்காது என்று கண்டு கொள்ளலாம். குமுகாய அடிநிலைகளில் ஊர்ந்து கொண்டிருக்கும் நம் பிள்ளைகளுக்கும் நமக்கும் கிடைக்கின்ற வாழு வாழவிடு, எப்படியும் வாழலாம்,

சந்தனக் கிண்ணம், உதட்டில் உதடு, இரவில் நடத்திய இன்பக் கதைகள், இன்ப லீலை போன்ற அம்மடலில் எடுத்துக் காட்டப்பெற்ற நூல்களையும், திறந்த பலகணி, எச்சில் இரவு, கசங்கிய காரிகை, சுடுகாட்டில் முத்தம், படுக்கையறைப் பாவை முதலிய அவர்கள் எடுத்துக் காட்டாத ஆயிரக் கணக்கான நூல்களையும் விட, மிக உயர் வாகவும் வெளிப்படையாகவும், இங்கன்று அமெரிக்கா, பிரான்சு, செருமனி முதலிய வெளி நாடுகளில் அப்பட்டமாக அச்சிடப் பெற்று நேரே இவர்களின் கைகளில் வந்து கசங்கிக் கிடக்கும் வழவழப்புத் தாள் படங்களும் நூல்களும் ஏராளம் என்பதை வேலூர் தன்மதிப்புக் கழகத்தார் அறிந்திருந்தால் இந்த வேண்டுகோள் எத்தகைய பயனை யும் ஓர் எள்ளின் மூக்கத்துணை அளவும் பெற வாய்ப்புத் தராது என் பதை முன்கூட்டியே அறிந்து கொண்டிருக்கலாம்.

இந்நாட்டில் திரைப் படங்கள் ஓடுகின்றவரை, குண்டுசி, பேசும் படம் முதலிய திரைக் கூத்தியர்தம் மேனிமினுக்கின் விளம்பரத் தாளிகைகள் நடைபெறுகின்ற வரை, தினத்தந்தியின் இழிதகையான பச்சையான நடைமுறைக் கொச்சைச் செய்திகளுக்குச் சப்புக் கொட்டும் மேனும் போக்கிகள் உள்ளவரை, எவனும் எந்தப் படத்தையும் எந்த அச்சகத்திலும் எப்படியும் அச்சிட்டு எவரிடத்தும் விற்கலாம் என்ற (சட்டமன்று) நடைமுறை உள்ளவரை தன்மதிப்பு இயக்கத்தார் அதி காரிகளையோ. அரசினரையோ நம்பிப் பயனில்லை. அவர்களால் எந்த நடவடிக்கையினையும் அவ்வளவு விரைவாகவும் நிறைவாகவும் எடுக்க முடியாது. மேனுடுகளில் திரையிடப் பெறும் ஆங்கிலப் படங்களை யும் வெளியிடப் பெறும் மஞ்சள்தாளிகைகளையும் ஏராளமாக இறக்கு மதி செய்து பண வருவாயைக் கணித்துக் கொண்டிருக்கும் அரசினர் இத்தகைய செயல்களில் துணிந்து ஈடுபடுவார்களா என்பது ஐயத்திற் குரியதே.

இந்தியத் தலைநகரான தில்லியிலும், பம்பாயிலும், பஞ்சாபிலும் கிடைக்காத மஞ்சள் தாளிகையே கிடையாது என்று கேள்விப்பட்டி ருக்கின்றோம். அதுவுமன்றி இங்குள்ள நடிகைகளை வெளி நாடு களுக்கு அழைத்துப் போகும் படப் பிடிப்பாளர்களும், பட முதலாளி களும் இவர்களை வைத்துக் கொண்டு பாலியல் உணர்வெழுப்பும் படுக்கையறைக் காட்சிகளை இயற்கை வண்ணத்துடன் இலக்கக்கணக் கான பொருள் செலவில் எடுத்து வந்து, இங்குள்ள அரசியல் மேனிலை அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் தனியறையில் போட்டுக்

காட்டி ஆயிரக் கணக்காகக் கட்டணம் தண்டிக் கொண்டிருப்பதாக வும் கூறக் கேட்டிருக்கின்றோம். காலஞ்சென்ற கலைவாணர் என். எசு. கிருட்டிணன் உள்ளபொழுது அவரை உள்ளிட்ட உயர்மன்றநடுவர் ஒரு வர், பெரிய திரைப்பட முதலாளி ஒருவர், இன்னும் படையதிகாரிகள், காவல் அதிகாரிகள் ஓர் இருவர் எல்லாரும் சேர்ந்து இக்கால் பெரிய நாட்டியப் பேரொளியாகச் சுடர்விட்டுக் கொண்டிருக்கும் இழிதகை நடிகை ஒருத்தியை அம்மணமாக ஆடவிட்டு அதனை அண்மைக் காட்சியாகப் பலகோணங்களிலும் இயற்கை வண்ணத்தில் மூன்றுமணி நேரம் ஓடும் திரைப்படமாகப் பிடித்துத் தம்முள் தாமே போட்டுப் பார்த்துக் களித்து வந்ததாகவும், அதனைத் துப்பறியும் காவல் துறை யினர் கைப்பற்றப் போனதாகவும். இவ்விக்கட்டான நிலைமை இக் கால் சென்னை அமைச்சரவையில் அமைச்சராகவுள்ள பெண் அமைச்சர் ஒருவர் வெளி வராமல் தடுத்து நிறுத்தியதாகவும் அக்கால் ஒரு செய்தி பரபரப்பாக உலவிக் கொண்டிருந்ததையும் கேட்டு மனம் புழுங்கி யிருக்கின்றோம். இச்செய்திகளை இங்கு ஏன் மீண்டும் கூறுகின்றோ மெனில் இத்தகைய அதிகாரிகள் வேலிகளாக உள்ளவரை இங்குள்ள இளம் பயிர்களையும் ஒழுக்கத்தையும் காத்தற்கு அக்கறையும் மானமும் உள்ளவர்கள் வேறு எவரும் இலர் என்பதைச் சுட்டிக்காட்டவே ஆகும்.

மாணவர்களும் மாணவிகளும் இத்தகைய காம வெழுச்சிக் கழி சடை நூல்களைத் தம் புத்தகங்களுக்கிடையில் திருட்டுத்தனமாக வைத்துக்கொண்டு படிப்பதைப்பற்றி இம்மடலில் மிக அக்கறையுட னும் வருத்தத்துடனும் மனப் புழுக்கத்துடனும் சுட்டிக் காட்டியிருக் கின்றனர். இச்செயல்களை யெல்லாம் சுட்டிக்காட்டி உணரவேண்டிய நிலையில் அதிகாரிகளோ அரசாங்கமோ இன்றில்லை. ஏனெனில் அவர் களுக்கும் இந்நிகழ்ச்சிகளெல்லாம் வெள்ளிடை மலையே! எனினும் அவற்றைத் தடுக்கப் போதுமான உரமோ உள்ளமோ அவர்களுக்கு இல்லை என்பதும் வெள்ளிடை மலையே! இவர்களுக்கு உண்மையி லேயே நாட்டில் நடக்கும் இத்தகைய நிகழ்ச்சிகளிலெல்லாம் கவலை இருக்குமானால், அருவருப்பு இருக்குமானால், மானம் இருக்குமானால் இந்தி யெதிர்ப்பின் பொழுது இராப்பகல் என்றில்லாமல் அச்சகங்களை யெல்லாம் சுற்றி வளையமிட்ட இவர்கள் — அக்கால் வெளியான சிறு சிறு துண்டு அறிக்கைகளை யெல்லாம் பறிமுதல் செய்து தீக்கிரை யாக்கிய இவர்கள் — இந்த நூல்களை வெளிப்படையாகத் தொங்கவிட்

டுக் கொண்டிருக்கும் கடைகளை யெல்லாம், திரைப்படச் செய்தித் தாள் களையெல்லாம் அவற்றை அச்சிட்டு வெளிப்படுத்தும் அச்சகங்களை யெல்லாம் சூறையன்றோ ஆடியிருத்தல் வேண்டும். அவ்வாறின்றி இவற்றைத் தடுத்து நிறுத்த ஏற்கனவே போதுமான ச ட் ட ங் க ள் இருந்தும் இவற்றில் கவனம் செலுத்தாமலிருப்பது ஏன்?

தமிழ் நலம் நாடுவதாக வாய்ப்பறை கொட்டிக் கொண்டிருக்கும் திரு. ஆதித்தனுர் அவர்கள் தம் செல்வ வலிவாலும் மேனுடு செ ன் று அங்குள்ள பரபரப்பான நாகரிகத்தையும் பணம் பறிக்கும் நா ட் ட நோட்டங்களையும் நேரில் கண்டு திரும்பிய பட்டறிவாலும் நடத்திக் கொண்டிருக்கும் செய்தித் தாள்களில் பக்கம் பக்கமாகத் திரைப்படக் கூத்திகளின் உள்ளாடைக் கவர்ச்சிகளையும், அசைவு நெளிவுகளையும் பெரிய அளவில் படம் பிடித்து வெளியிட்டு இந்நாட்டு இளைஞர்களை யும் இளமங்கையர்களையும் திசை திருப்பி தீ நாகரிகப் படுகுழிகளுக்கு வழியமைத்துக் கொண்டிருப்பதை எ ந் த அதிகாரியாவது எ ந் த அமைச்சராவது கண்டு நாணமும் மானமும் கொண்டாரா? இல்லையே?

இளைஞர்களின் நரம்பு நோய் கண்ட ஒளி குன்றிய உடல்களில் தீப்போல் கனன்று கொண்டிருக்கும் இக்காம வெழுச்சி நோய்களை உர மிட்டு வளர்க்கும் பேசும் படம், குண்டூசி, இந்துநேசன், இராணி முத லிய எழுத்துக் குப்பைகளை உடனே வாரி யெறியாமல் இருக்கும் அர சினர், வேலூர் தன்மதிப்புக்கழகத்தார் எடுத்துக் காட்டிய நூல்களை மட்டும் தடைசெய்யவோ பறிமுதல் செய்யவோ எப்படி முயல்வர்? இத்தகைய நூல்கள் வெளிவர அடிப்படைத் துணிவை எவ்வெவர் இந் நிலத்தில் வித்திட்டுக்கொண்டு வருகின்றனர் என்று தெள்ளத் தெளி வாக, உணர்ந்து கொள்ளவும், உணர்ந்து தடை செய்யவோ தண்டிக் கவோ முயலவும் இயலாமல் நாடியொடுங்கிக் கிடக்கும் அரசினரிட மும் அதிகாரிகளிடமும் அத்தகைய தலைவர்களிடமுமே முறையிடுவ தால் என்ன பயன் விளைந்துவிடப் போகின்றது?

பாலியல் அறிவு தீதன்று. ஆனால் பாலியல் உணர்வு தான் தீப் போன்றது. தன்னைப் பற்றி யிருப்பவர்களைத் தீப்போல் வாட்டிக் காந்தியெடுத்து ஒளியும் வலியும் இழக்கச் செய்து நடைப் பிணங்க ளாக நடமாட வைப்பது. மருத்துவத் துறையில் பயிற்றப்பெறும் அறிவு போல் அளவிட்ட முறையில் பள்ளிகளிலேயே பாலியல் அறி

வையும் பயிற்றுவிக்கலாம். அதனால் பிழையில்லை. தவறும் விளைய வழியில்லை. ஆனால் குமுகாயக் கேடர்களை ஆசிரியராகக் கொண்டு வளரும் இப்பாலியல் உணர்ச்சிக் கொந்தளிப்புகள் இந்நாட்டு மக்களையே அழித்துக் கெடுக்கவல்ல ஆற்றல் வாய்ந்தன. ஆடவர்தம் ஆண்தன்மையினையும், பெண்டிர்தம் பெண் தன்மையினையும் சிறிது சிறிதாக இழந்து கொண்டிருக்கும் இவ்விந்திய நாட்டில் சீர்திருத்தக்காரர்கள் எத்தனையர் வரினும் இத்தகைய குமுகாயப் புழுவரிப்புகளைத் தடுத்து நிறுத்த முடியுமா என்பது ஐயமே. ஒருவேளை அரசினர் பாங்கில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமானாலும் இவர்கள் தப்பித்துக் கொள்ளவும், ஒளிந்து கொள்ளவும் போதுமான சந்து பொந்துகள் நம் சட்ட அமைப்புகளில் நிறைய உள. அவற்றை விழிப்பாகப் பார்த்து மூடினாலொழிய இன்ன பேதையரையும், அவர்கள் செய்துகொண்டு வரும் அட்டூழியங்களையும், அவற்றிற்கு அடிப்படையான திரைப்படக் கூத்தாடிகளையும், அவர்களின் கிளர்ச்சி உருவங்களையும் கெக்கலிப்புகளையும் அடக்குவது முயற்கொம்பே!

நூற்களில் மட்டுமன்று; இன்று வெளிவரும் திரைப் படங்களில் பாடப்பெறும் பாடல்களிலும் அருவருப்பு நெளிந்தாடுகின்றதை இத்தன்மதிப்பு இயக்கத்தார் அறியாரா? திரைப்படப் பெண்டிர்க்கும் பேடியர்க்கும் இத்துணை விளம்பரமா? அவர்கள் என்ன தெய்வத் திருவுருவங்களா? மானமும் நாணமும் இல்லாமல் கல்லூரி, பள்ளி மாணவர்தம் பொத்தக மேலட்டைகள் முதல், குடும்பப் பெண்டிர்தம் கைப்பைகள் வரை அவர்கள் கோணல் முகங்கள் ஒளிவிட வேண்டுமா? இராணியும் பேசும் படமும் வாங்கிப் படிக்காத, வாங்கித் தம் மனைவியர்க்குப் படிக்கக் கொடுக்காத ஆடவர்கள் எத்தனைப் பேர்? சமையல் அறை முதல் படுக்கையறை வரை தம் சேலைத் தலைப்பில் முடி போட்டுக்கொண்டு படிக்கும் அளவிற்கு இராணியிலும் பேசும் படத்திலும் பெண்களுக்கு என்ன இருக்கின்றது? அவர்கள் கூடும் இடங்களிலெல்லாம் அவர்களின் குடும்ப நலன் பற்றிப் பேசாமல் ''இந்த நடிகைக்கு ஏழுமாதமாம்; அந்த நடிகனுக்கும் இந்தக் கதைத் தலைவிக்கும் எத்துணைப் பொருத்தம்'' என்றெல்லாம் பேசிக்களிக்கும் அளவிற்கு இந்தப் பெண்டிர்தம் உறவினர்களா இவர்கள்? ஏன் இவர்களுக்கு இத்துணை மயக்கம்? நடிக நடிகையர்தம் உந்துகளின் எண்கள், அவர்தம் பிறந்த நாள்கள், திருமணக் குறிப்புகள், மணவிலக்குக் கணக்குகள் முதலியவற்றை நினைவில் வைத்துக் கொண்டி

ருக்கும் அளவிற்கு இவர்கள்தம் ஆட்ட பாட்டங்களை வளர விட்டவர் யார்? இந்த அரசினர்தாமே! நூல் நிலையங்களில் உள்ள உயர்ந்த வாழ்க்கை நூல்களும் அறிவியல் அறவியல் நூல்களும் புத்தம் புதியனவாக ஒளிமழுங்காதிருக்கின்ற வேளையில், பேசும்படம் இராணி முதலிய குப்பைகளின் கிழிந்த பக்கங்கள் குப்பையில் கிடந்தாலும் எடுத்துப் படிக்குமளவிற்கு இவற்றில் குமிழ்த்தோடும் ஒழுக்க ஒழுகல்களைப் பெருகவிட்டவர்கள் அரசினர் தாமே! இளைதாக முள்மரம் கொல்லத் தெரியாத இவர்களா, காழ்த்த விடத்துக் களைந்து கைவருந்தப் போகின்றனர்?

இக்கால் அரசியல் தலைவர்களாக உள்ள ஒரு சிலரே தம் இளவல் கூட்டத்தினர்க்கும் தம் பக்கமேளமாக உள்ள திரைப்படக் கூத்தாடிகளுக்கும் இணைந்த தொடர்பை ஏற்படுத்தி விடுவதை இத்தன்மான இயக்கம் அறிந்திருக்குமே! "அண்ணன், அண்ணி" உறவு முறை கொண்டாடும் அவர்களின் பருவுருவங்களை எத்தனையோ கோணங்களில் கண்ணன் செய்த காம விளையாட்டுகளாக அச்சிட்டு வெளியிடப் பெறும் நாள் காட்டிகள் இவர்கள் கண்களிற் படவில்லையா? திரைப்படப் போலி மறவர்தம் புல்லுருவங்களை கைந்நெளிகளிலும், பெண்டிர்தம் தொங்கல் மணிகளிலும் பொறித்துக் கொண்டுள்ள இழிநிலைக்கு இந்நாடு இழிந்து போய்க் கொண்டிருக்கையில் தன்மான இயக்கத்தார் தம் முயற்சி கடலிற் கரைத்த காயமே! இருப்பினும் அவர்கள் போன்ற நல்ல உள்ளங்களும் பொதுநலம் நாடும் பெற்றியர்களும் உள்ளவரை நமக்கு நம்பிக்கை ஒளி தென்படவே செய்கின்றது. வெல்க அவர்தம் முயற்சி!

– பெருஞ்சித்திரன்

திருத்திப் படியுங்கள்.

இம்மாதம் தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இரு இதழ்களையும் அச்சிட வேண்டிய அழுத்தத்தாலும், வேறு பல புதிய முயற்சிகளின் பெருக்கத்தாலும் இவ்விதழ்ப் பதிப்பில் கீழ்க்காணும் பிழை நேர்ந்து விட்டது. அன்பர்கள் அருள் கனிந்து திருத்திப் படிப்பார்களாக.

9–ஆம் பக்கத்தை 12–ஆம் பக்கமாகவும், 12–ஆம் பக்கத்தை 9–ஆம் பக்கமாகவும், 9–ஆம் பக்கத்தில் உள்ள முன்பக்கத் தொடர்ச்சியை 11–ஆம் பக்கத் தொடர்ச்சியாகவும் கொண்டு படிக்கவும்.

– அமைச்சர்.

முதல் வேலை

– பாவேந்தர். பாரதிதாசன்,

விடுதலை இல்லாத போது – மொழி
ஏது? – இனம்
ஏது? – பண்டை
மேலான வரலாறும் ஏது ? – நீ
விலக்கல் இலாததமிழ் இலக்கியத் தின்சல்லி
வேரும் சிறிதும் நிலைக் காது

கொடிநாட்டி வாழ்ந்தனை மண்ணில் – அதை
எண்ணித் – தமிழ்
எண்ணி – அந்தக்
கொடியவரை நடுங்கப் பண்ணிக் – கொடுங்
கோலைமுறித்த பின்புன் வேலை முடிந்ததென்று
கொட்டடா முரசு நண்ணி

தாய்க்கு மகன்செய்யும் தொண்டு – ஒன்
றுண்டு – நன்
றுண்டு – தாய்
தளைநீக்க வேண்டும் வெ குண்டு – மேலும்
தமிழன்நீ தமிழ்ப்பழங் குடிக்கோர் இழுக்கென்றால்
சாக்காடும் உனக்குக்கற் கண்டு.

பாக்கியம் பெற்றவன் நீதான் – புலி
நீதான் – சிங்கம்
நீதான் – இந்தப்
பாராண்ட மறத்திஉன் தாய்தான் – தமிழ்ப்
பண்பாட்டை மிதிப்பவன் பழிவாங்கப் படவேண்டும்
சும்மா இருந்தால் நீயோர் நாய்தான்

பொற்குவை தன்னைக் கரண்டி – யாற்
சுரண்டிப் – பல
வண்டி – ஏற்றிப்
போனான் நமக்கே திங்கே உண்டி? – உன்
பொய்யாத வாழ்வெங்கே மெய்யான உணர்வெங்கே
போயின வோஇருள் மண்டி ?

ஒன்றே உனதுமுதல் வேலை – இது
காலை – கொடுங்
கோலைத் – துண்டாய்
ஒடிக்க வேண்டும்திறத் தாலே – பார்
உன்படை! உன்னினம் நில்லதன் முன்னணி
உனக்குப் பகைவர் எந்த மூலை ?

நூற்சிறப்பு.

உலக முதல் இலக்கியச் செம்மொழி

ஆங்கில நூல். (The Primary Classical Language of the World).

மொழிப்பெரும் புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் நெடுநாட்கட்கு முன்பே எழுதி அண்மையில் வெளியிட்டுள்ள "உலக முதல் இலக்கியச் செம்மொழி" எனும் ஆங்கில நூல் வரலாற்று நூலின் தன்மையும் மொழி நூலின் தன்மையும் தன்னகத்தேகொண்டு மிளிரும் ஒரு சிறந்த நூல். இந்நூல் நெடுநாட்களின் முன்பே எழுதப் பட்டு விட்டமையானும், இந்நூலின் பல கருத்துகள் பாவாணரின் வேறுபல கட்டுரைகள் வழித் தென்மொழியில் வெளிவந்துள்ளமை யானும், தென்மொழி அன்பர்க்கு இந்நூல் புதுமைச் சிறப்புடையய தாகத் தோன்றுமற் போயினும், தமிழ்மொழி யியல்பை அறியாதார்க் கும், பாவாணர் கூறும் உண்மை கருத்துகளில் இதுவரை அறிமுகம் அடையாதார்க்கும் இந்நூல் ஓர் அரும்பெரும் அறிவுக் கருவூலமாகத் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆங்கிலம் கற்ற பிறமொழிப் புலவர்கட்கும், உலகமொழி நூலாசிரியர்க்கும் இஃது உண்மை விளக்கமாகப் பயன் பட வேண்டும் என்ற நோக்கத்தால்தான்.

இற்றைய மொழி நூலறிஞர் எனப்படுவோர் உண்மை மொழி நூலைப் பற்றிக் கொள்ளாமல் மேனாட்டினின்று அண்மையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள வண்ணனை மொழி நூல் (Descriptive Lingusties) என்னும் மொழிநூற் போலியைப் பற்றிக்கொண்டு, தமிழின் பிறப்பியலுக்கும், இயல்புக்கும், செம்மைக்கும் சீர்மைக்கும்

(முன்பக்கத் தொடர்ச்சி)

கொண்டு போய்விடும். ஒரு மொழி உலகில் வழங்குவது அதைப் பேசுவாரின் தொகையைப் பொறுத்ததே. பேசுவார் தொகை குறை யின் வழக்கழியும் அதுவே மொழியழிவாம்.

இதுகாறும் கூறியவற்றால், இத்தமிழ் நாட்டிற்கு ஏற்பது தமி ழும் ஆங்கிலமுமாகிய இருமொழித்திட்டமே யென்றும், ஆங்கிலம் நீங்கின் இந்தி வந்து தமிழை ஒழித்துவிடு மென்றும் தெற்றெனத் தெரிந்து கொள்க.

(க) தமிழ் மாணவர் தாங்கொணாத வீண் கடுஞ்சுமை.

(உ) தமிழர் இந்தியார்க்கு (இந்தி மொழியாளர்க்கு) என்றும் அடிமைப் பட்டிருக்கும் நிலை.

(ங) தமிழ் நாளடைவில் ஆரியம் போல் அழிந்தொழிதல்.

ஆங்கிலம் நமக்கு இறைவனால் அளிக்கப் பெற்ற ஈவேயன்றி, ஆங்கிலராற் சுமத்தப்பட்ட சுமையன்று. இந்தி இந்தியரை ஒற்றுமைப் படுத்தும்; ஆங்கிலம் அவரை இருவேறாக்கும் என்பது, நஞ்சுண்டவன் வாழ்வான், அமுதுண்டவன் மாள்வான்! என்பது போன்றதே. ஆங்கிலம் உலகமொழியாகிவிட்டதனால், வடநாட்டுத் தொடர்பிற்கும் அஃதொன்றே போதும்.

இந்தியாளர் உண்மையாக ஆங்கிலத்தைப் புறக்கணிக்கவில்லை. அவரும் அதன் இன்றியமையாமையை உணர்ந்துதான் இருக்கின்றனர். தமிழர் அல்லது தென்னாட்டார் திறந்தவாயரென்றும், அவர் வாயில் இந்தியைத் எளிதாய்த் திணித்துவிடலாமென்றும், அதற்கு உடனிருந்துதவும் கோடரிக்காம்புத்தலைவர் பலர் உளரென்றும், கண்டு கொண்டே இந்தித் திணிப்பை விடாப் பிடியாய்க் கொண்டுள்ளனர். ஆங்கிலத்தை அவர் உள்ளத்தில் வெறுக்காமையால், அவர் சொல்வது உள்ளொன்று புறம்பொன்றே. இதை அறிந்திருந்தும் தமிழ் நாட்டுத் தலைவர் தம் பதவி நிலைப்பிற்காகவே இந்தியை வரவேற்கின்றனர்..

இந்தி வெள்ளத்தை இன்று வன்மையாகத் தடுத்துக் கொண்டிருப்பது ஆங்கில வல்லணையே. அதனை உடனே தகர்க்க இந்தியாரும் அஞ்சுகின்றனர். ஆங்கிலக் கதிரவன் அகலின் இந்தியா இருண்டு விடும் என்பதை அவர் அறிவர். ஆயின், குறுகிய நோக்குள்ள சில தமிழ்ப் பேராசிரியரோ, ஆழ்ந்த எண்ணமும் கூரிய மதியுமில்லாது, ஆங்கில அணையுடைத்துத் தம் தவறான தமிழ்ப் பற்றினால் இந்தியை உடனே வரவழைக்க முற்படுகின்றனர்.... இவர் தாம் செய்வது இன்னதென்றறியாது தம் நாட்டார் அல்லது இனத்தார் தலையில் மண்ணையும் நெருப்புத் தழலையும் வாரிப் போடுபவரே.

ஆங்கிலம் அறிவு மொழியும் உலக மொழியுமாயிருப்பதுடன், தமிழுக்கு நட்பு மொழியாகவும் உள்ளது. இக்காலத்தும் இனிமேலும் தமிழ் நாட்டில் இருமொழிக் கல்வியேயன்றி ஒருமொழிக் கல்வி இருக்க

முடியாது. இருமொழித் திட்டத்தில் தமிழுக் கடுத்த இரண்டாம் மொழி ஆங்கிலமே. ஆதலால், அடியினின்று முடிவு வரை பொதுக் கல்வி இருமொழியிலும் கற்பித்தல் வேண்டும். பிழைப்பிற்காகவே ஏதேனும் ஓர் அளவாகக் கல்வி கற்றுத் தமிழ் நாட்டிலேயே வேலையை மேற்கொள்பவருக்குத் தமிழ்வாயிற் கல்வி போதும். மேற்கல்விக்கும் அலுவற்கும் வெளிநாடு செல்ல விரும்புவார்க்கு ஆங்கில வாயிற்கல்வி இன்றியமையாதது. ஆங்கிலவாயிற் கல்வி கற்பதனால் தமிழ் மாணவர் தம் தாய்மொழியை மறந்துவிட முடியாது. அலுவல் தொடர்பல்லாத செய்திகள் பற்றி வீட்டிலும் வெளியிலும் அவர் பெரும்பாலும் தமிழிலேயே பேசவேண்டியிருக்கும். அன்னார்க்குத் தமிழ்ப் பற்று மட்டும் இருந்தாற்போதும். இத்தகைய கல்வித் திட்டத்தால் தமிழும் வளம் பெறும்; தமிழ மாணவரும் அறிவு வளர்ச்சியும் அலுவற்பேறும் பெறுவர். தமிழ்வாயிற் கல்வி மாணவரும் தம் தனி வேற்று முயற்சியால் ஆங்கில அறிவும் பேச்சாற்றலும் அடைந்து கொள்வது நன்றே.

தமிழ் வாயிற் கல்விக்கு, முதற்கண் ஆங்கில அறிவியற் குறியீடுகளைத் தனித் தமிழில் மொழிபெயர்த்துக் கொள்வது இன்றியமையாததாகும். இப்பணிக்கு ஆங்கிலமும் தமிழும் ஒருங்கே அறிந்த உண்மைத் தமிழன்பரை அமர்த்துவதே தக்கதாம். தமிழ்ப் பகைவரையும் போலித் தமிழரையும் தமிழ்ப் பற்றற்ற தெலுங்கரையும் தமிழறியாத பெருமாளரையும் கொள்கையற்றவரையும், தன்னலக்காரரையும் உரமிலிகளையும் அமர்த்தி, பெரும்பாலும் வடசொற்களாக மொழி பெயர்த்தும், சிறுபான்மை மொழிபெயர்க்காது ஆங்கிலச் சொற்களை அங்ஙனமே வைத்துக்கொண்டும் கலவை நடையிற் கற்பித்துத் தமிழிற் கற்பிப்பதாக நடித்து வருவது, மக்களை ஏமாற்றுவதேயன்றி வேறன்று. இதைத் தவறான தாய்மொழிப் பற்றுக் கொண்டு தமிழை வளர்ப்பதுபோல் தளர்த்துவரும் தமிழ்ப் பேராசிரியர் கவனிப்பதே யில்லை. மேலும், மாணவரைத் தமிழிற் கற்குமாறு வற்புறுத்தி வரும் தமிழ்ப் பேராசிரியர் சிலர், தம் ஆங்கிலப் பட்டத்தைத் தமிழிற் குறிக்கும்பொழுது தமிழில் மொழிபெயர்க்க விரும்பாமை வேடிக்கையான செயலாகவே விளங்குகின்றது.

தமிழ் என்றும் இருக்கவேண்டுமெனில் ஆங்கிலத்துணை அதற்கு இன்றியமையாதது. ஆங்கிலத் துணை நீங்கின், உடனே இந்தி வெள்ளம் வந்து தமிழ்மேற் சாடி அதனை நாளடைவில் அடித்துக்

தொடர்ச்சி ப. 9 இல்

தமிழ்ப் பேராசிரியரின் தவருன மொழிக்கொள்கை.

ஒருநாட்டுப் பொதுக்கல்வி, அந்நாட்டு மக்களின் தேவைக்கும் திறமைக்கும் ஏற்ப, ஒரு மொழிவாயிலாகவோ இருமொழி வாயிலாகவோ மும்மொழி வாயிலாகவோ அமையும். பண்டைக் காலத்திற் பலநாட்டுக் கல்வி ஒருமொழி வாயிலாகவே யிருந்தது. ஆங்கிலர் வரும் வரை தமிழ் நாட்டிலிருந்தது ஒரு மொழி வாயிற் பொதுக் கல்வியே. ஆங்கிலராட்சியில், தமிழ் நாட்டில் தமிழொடு ஆங்கிலமும் கல்வி வாயிலானது. அஃது ஆளுமினத்தாரின் தாய்மொழியாயிருந்ததி ஞல் மட்டுமன்று, இன்றும் தமிழிலில்லாததும் மக்கள் முன்னேற்றத் திற்கு இன்றியமையாததுமான பல்துறை அறிவியல் இலக்கியத்தைக் கொண்டிருப்பதனுலுமே, நம் அகக் கண்ணைத் தெளிவாக்கிப் பல்வேறு அறிவியற் பாதைகளைக் காட்டி அவற்றில் முன்னேறிச் செல்லவைத்தது ஆங்கிலமொழியேயாதலால், அதன்மேற் குறை கூறுவதும் அயன் மொழியெனப் புறக்கணிப்பதும், அறியாமையும் நன்றிகெட்ட செயலுமாகும்.

"எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

இன்றும் அறிவிற் செல்வதற்கு வழிகாட்டியாயிருப்பது ஆங்கிலமே. அதனுல் அதனைப் புறக்கணிப்பது தற்கொலைக் கொப்பாகும். ஆகவே, தமிழ், ஆங்கிலம் என்னும் இரண்டும் நம் நாட்டுக் கல்வி வாயிலாயிருத்தல் வேண்டும். ஆயின், இந்தி தமிழர்க்கு எள்ளளவும் வேண்டுவதன்று. அதனுல் தீமையேயன்றி நன்மையில்லை, அத் தீமைகளாவன:—

மொழிப் பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர்.

பொருந்தாவாறு மொழியாராய்ச்சி என்ற பெயரால் தப்புந் தவறுமான கருத்துகளை பரப்பிக்கொண்டு வருகின்றனர். அன்னாரின் போலிக் கருத்துகளை உண்மை யென்னும் வாள் கொண்டு இந்நூல் வெட்டி வீழ்த்துகின்றது.

“கலைகளும் அறிவியல்களும் கால வளர்ச்சிக் கேற்ப முன்னேற்றமடைந்து வருகின்றன. என்ற பொதுவான நம்பிக்கை மொழிநூலைப் பொறுத்தவரை பொய்த்துப் போகின்றது என்று கூறலாம். நடுத் தரைக் கடற் பகுதியே தமிழனின் பிறந்தகம் என்றும், வேதமொழிக்குப் பிற்பட்டதும் அரைச் செயற்கையானதும், இந்திய எசுப்பராந்தோ (கலவை மொழி) என்று அழைக்கத் தகுந்த கலவை, இலக்கிய வழக்குக் கிளை மொழியானதுமாகிய சமற்கிருதமே இந்தோ-ஐரோப்பிய மொழிகட்கெல்லாம் கருவானது என்றும் கொண்டு அடிப்படையிலேயே சறுக்கி விழுந்து விடும் இற்றைய மொழிநூலாளரின் கொள்கையே இதற்குத் தக்க சான்றாகும்” என்று பாவாணர் முகப்புரையிற் கூறியிருப்பது இத்துறையில் அவர்தம் கருத்துத் தெளிவினைப் புலப்படுத்துவதாகும். இம் முகப்புரை மட்டுமே ஓர் அழகிய கட்டுரையாக அமைகின்றது என்பதனையும், அதனைப் படித்தோர் நூலைப் படிக்க உடனடியாகத் தூண்டப்படுவர் என்பதனையும் அவ்வுரையிற் புகுந்தோர் உணர்வர்.

“இயற்கையாலும் மாந்தப் பதர்களாலும் பெருங்கேடுகட்கு உட்பட்டதும், வெளிநாட்டுக் குறும்பர்களாலும் உள்நாட்டு எத்தர்களாலும் மிகுதியும் முறைகேடு செய்யப்பட்டதுமான ஒருமொழி தமிழைப் போல் இப்பரந்த உலகெங்கணுமே இல்லை” என்று பாவாணர் வருந்திக் கூறியிருப்பதுதான் எவ்வளவு உண்மையானது!

சமற்கிருத வாணர்கள் நெடுநாட்களாகவே மொழிப் புரட்டுகளையும், இலக்கியத் திருட்டுகளையும், மேற்கொண்டு தமிழை மறைமுகமாகப் பழித்துரைத்துத் தங்கள் மொழியை உயர்த்திக் கொண்டனர். வெளிநாட்டினின்று போந்த மாக்சு முல்லர் கூட்டமும், சமற்கிருத ஆராய்ச்சியிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி, குருட்டுத் தனமாக சமற்கிருதச் சான்றுகளையே சரி என்று நம்பி அவற்றையே எங்கும் பரப்பியதன் வாயிலாய், சமற்கிருதப் பொய்யர்களின் புரட்டுக்குப் புது வலிவு ஊட்டிவிட்டது. தமிழ் கேட்பாரற்றுப் புறக்கணிக்கப்பட்டது என்னும் இவ்வுண்மைகளை யெல்லாம் பாவாணர் ஆணியறைந்தாற் போல் தம் நூலில் தெளிவுபடுத்திக் காட்டுகின்றார்.

தமிழனின், ஏன் உலகமாந்தனின் பிறப்பகமே இற்றைத் தமிழகத்துக்குத் தெற்கே கடலுள் முழுகிக் கிடக்கும் இலெமூரியாப் பெருநிலம் என்றும், இந்திய வரலாறு உண்மையில் தென்னகத்திலிருந்து தொடங்கப் பெறல் வேண்டும் என்றும், இந்திய நாகரிகப் பண்பாட்டின் அடிப்படை தமிழ் நாகரிகப் பண்பாடே என்றும் உண்மை வரலாற்றாசிரியர் ஒருசிலர் கூறிப் போந்ததைப் பாவாணர் தம் அகன்ற மொழிநூல் அறிவின் அடிப்படையில் நிலை நாட்டுகின்றார். ஒருமொழி தன் பிறந்தகத்திலேயே தன் முந்தியன்மை தோன்றுமாறு பழைய வடிவங்களுடனும் தூய்மையுடனும் விளங்கும் என்ற மொழிநூல் உண்மை தமிழுக்குப் பொருந்து மாற்றை எடுத்துக் காட்டுகின்றார். வடநாட்டில் காணப்படும் திராவிடக் கிளை மொழிகளில் தமிழ் வடிவங்கள் மிகமிகச் சிதைந்திருப்பதும், தமிழகத்திலேயே வடக்கிருந்து தெற்கே செல்லச் செல்ல மொழி தூய்மையடைந்து வருவதும், இற்றைத் தமிழகத்தின் தென்கோடியான திருநெல்வேலி மாவட்டத்திலேயே தமிழ் ஒலிகள் இன்றும் இயல்பாகப் பலுக்கப்பட்டு வருவதும், திருநெல்வேலித் தமிழே இன்று பிற பகுதிகளிற் பேசப்படும் தமிழினும் வளமும் தூய்மையும் உடையதாயிருப்பதும் முன்னுரையில் (பக்கம் 20, 21) பாவாணரால் நன்கு விளக்கப்படுகின்றன.

திராவிட மொழிகட்குள் தமிழே தலையாயதும் முன்மையதும் பிறவற்றுக்குத் தாயாயதும் என்பதை வரலாறு அழிந்த இக்காலத்தில் மொழி ஆய்வே காட்டமுடியும். தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், பிற கிளை மொழிகளான மால்தோ, கோந்தி, பிராகுவி பிற மொழிகளிலுள்ள பெரும்பாலான திராவிடச் சொற்கட்கு வேர்கள் எல்லாம் தமிழிலேயே உள்ளன என்பதைப் பாவாணர் எடுத்துக் காட்டுகின்றார். (பக்கம் 9).

தமிழர் தென்னகத்திலேயே தோன்றி உலகின் பிற பகுதிகட்குப் பரவியிருத்தல் வேண்டுமேயல்லாது, பிற பகுதிகளினின்று தமிழகத்துக்குக் குடி புகுந்தவரல்லர். இது வரலாற்றாசிரியர் ஒருசிலர் தம் உண்மைக் கூற்றாகும். பாவாணரின் மொழிக் கொள்கை இதனை நிறுவுகின்றது. வடநாட்டுத் திராவிடக் கிளை மொழிகளும், தமிழகத்தின் மலைவாழ் மக்களின் பேச்சு மொழிகளும் முந்தியல் தன்மை வாய்ந்தவை என்று பல மொழிநூலாளர் கருதிக் கொண்டுள்ளனர். இக்கருத்து பிழையாகும். அம்மொழிகளில் வழங்கும் சொற்கள் முந்தியன்மை வாய்ந்தன அல்ல, சிதைவுச் சொற்களே என்றும், தமி

முகத்து மலைவாழ் மாந்தரும் முந்தியன் மாந்தர் அல்லர் பிற்காலத்துச் சூழல்களால் மலைகளிற் சென்று வாழத் தொடங்கியவரின் வழியினரே என்றும் பாவாணர் மேற்கோள்களுடனும் சொல் வழக்குச் சான்று களுடனும் நிறுவி, அதன்வழி பழந் தமிழகமே முந்தியன்மை வாய்ந் ததும், தமிழன் பிறந்தகமுமாகும் என்று நிலை நாட்டுகின்றார்.

மற்றும் தமிழின் பொதுமை, சேர சோழ, பாண்டியரின் தொன்மை, தமிழர் மதிக்கப்படாதிருத்தற்குக் காரணங்கள், கால்டு வெல் செய்துள்ள பிழைகள், மொழி நூலின் தோற்றமே தமிழகம் என்ற உண்மை, இற்றைய வண்ணனை மொழிநூலின் தோற்றமே. பிழையான போக்கு, மாக்சுமுல்லர் கூட்டத்தினரின் மொழியியல் மயக்கம், சென்னைப் பல்கலைக் கழகப் பேரகர முதலியின் சீர்கேடு போன்ற பல கருத்துகளையும் இந்நூல் முட்டற விளக்குகின்றது. குறிப்பாக இற்றைய வண்ணனை மொழி நூலின் பிழைகளையும் (The Fallacies of Descriptive Linguistics) மாக்சு முல்லர் கூட்டத்தி னரின் மயக்கத்தினையும் (The Linguistic Illusion)பாவாணர் எடுத் தியம்பும் திறன் வியக்கத் தக்கது. (அவ்விரண்டு இயல்களும் தென் மொழியில் தனிக் கட்டுரைகளாக விரைவில் தமிழாக்கப் பெற்று வெளி வரும்)

இன்று உண்மைத் தமிழரையும் மயக்கிக் கொண்டிருப்பன மேற் குறித்த இரண்டு செய்திகளே. மொழி நூல் வாணர் அனைவரும் ஒரு முகமாகத் தமிழ் தனித்தியங்க வல்லது அன்று, அல்லது அது தேவையுமன்று என்றும், தமிழ் வடமொழிக்கு மிகவும் கடன்பட்டுள் ளது, வடமொழியே தமிழினும் முன்மையுடையது என்றும் வர லாற்று, மொழியியல் (போலிச்) சான்றுகளுடன் கூறித் தம் எண் ணிக்கை மிகுதியானும், குரல் வலியாலும் தம் கொள்கையை மெய் போலும் நிலை நாட்டவே, உண்மைக் கொள்கையுடையராய தனித் தமிழியக்கத்தினர் பிறர் தம் கண்கட்குக் குறுகிய நோக்கமுடையவ ராயும், தமிழ் வெறியர்களாகவும் காட்சியளிக்கின்றனர். இப்புதிய மொழிநூல் வாணர், மொழியில் ஏற்படும் எல்லா மாறுதல்களும் அதன் வளர்ச்சியைக் குறிப்பனவே என்ற முட்டாள்தனமான கருத்து களை மக்கள்பாற் பரப்பி, மொழிச் சிதைவையும் கலப்பையும் வரவேற் கின்றனர். பாவாணர் இப்போலிக் கொள்கைகளையெல்லாம் பொடிப் பொடியாக்கி உலக மொழிகள் அனைத்துள்ளும் தமிழின் தனித் தன்மையை நிலை நாட்டுகின்றார்.

"தமிழ் காலத்தால் மிக முந்திய மொழிமட்டு மன்று; உலகின் முதற் செம்மொழியும் அதுவேயாகும். அதன் தொடக்க நிலை உலகப் பொது இயற்கை மொழி வடிவத்தில் இருந்தது. (Universal National Language) அம்மொழியோ உணர்வொலி, மிடற்றெலி, ஒப்பொலி, குறிப்பொலி, வாய்ச் செய்கையொலி, சுட்டொலி என் னும் அறுவகை ஒலிகளாற் படிப்படியாக உருவாகியது" என்று பாவாணர் கூறி (பக்கம் 124) அவ்வொலிகளால் மொழி எவ்வாறு உருவாகியது என்பதை எழுதிக் காட்டுகளுடன் விளக்குகின்றார்.

தமிழ்ச் சொற்கள் எல்லாம் பொருள் குறித்தனவே என்றும், அவை எவ்வாறு மிகச்சிறிய வேர்களினின்று முளைத்துக் துளிர்த்துத் தழைத்துச் செழித்துப் பரந்து பல்வேறுபட்ட சொற்களாக மலர்ந்து கனிந்துள்ளன என்றும் பாவாணர் விளக்குந் திறன் மொழிநூற் புல மையில் இன்று அவர்க்கீடு எவரும் இல்லை என்பதையே நமக்கறிவிக் கின்றது.

முன்மையியல், முன்னுறலியல், முற்செலவியல் மேற் செலவியல், நெருங்கலியல், தொடுதலியல், கூடலியல், வளைதலியல், துளைத்த லியல், துருவலியல், தோன்றலியல் என்னும் படிப்படியான பதின்வகை யிற் சொற்கள் பிறக்குமியல்பை அவற்றின் உள் துறைகளோடும் பாவாணர் நூற்றுக் கணக்கான எடுத்துக் காட்டுக்களுடனும் விளக் கிச் செல்கின்றார்.

மற்றும் சொற்கள் திரிந்தமையும் முறைகளையும், தமிழ் மொழி இலக்கியச் செப்பம் அடைந்த வகைகளையும் ஆரியத்தும், உலகப் பிற மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் அமைந்திருத்தலையும், வேதமொழி, சமற்கிருதமாக வளர்ந்து தமிழின் தொடர்பால் செப்பமடைந்தமை யினையும் இந்நூலிற் பரக்கக் காணலாம்.

தொல்காப்பியர் காலத்தினையும், தொல்காப்பியத்தில் ஆரிய ஊடுருவலையும், தொல்காப்பியர் தம் பிழைகளையும் பாவாணர் கூறி யுள்ளதினுஞ் சிறக்கக் கூறுவார் எவரேனும் உளரோ? தமிழ் ஆரிய வழிப்பட்டுச் சிதைந்தும், இருட்டிக்கப்பட்டும் கெடுக்கப்பட்டும் பிற ழவு உணர்த்தப் பெற்றும் இன்றைய இழிநிலைக்காளாயிருக்கும் வகை களையும் மறுக்க முடியாதவாறு விளக்கிக் காட்டுகின்றார். தமிழே உலக முதல் இலக்கியச் செப்பமொழி என்பதற்கு அவர் கூறும் பதி னைந்து காரணங்களும் பிறரால் மறுத்தொதுக்க முடியாதன. மொத்

துரை-மாணிக்கம்

(9)

தெய்வக் காதல் திருவினுள் சாற்றிய
மெய்ம்மை அன்பின் மேன்மை விளக்கம்
முதியோள் செவியிற் பட்டதும் முன்பிலாப்
புதிய உணர்வினுல் புளக முற்றே
ஐயையை நோக்கினுள் அத்தை! அவள்முகம்
தெய்வ ஒளியால் திகழ்ந்தது கண்டாள்!
உலகியல் நெறியால் உரவோர் கண்ட
அலகிலா ஒழுங்கின் அடிப்படை உண்மை
மரபுப் பயிற்சியால் மங்கைய ரிடத்து
விரவிக் கிடப்பினும், செயலாள் விளங்கினும்
அதனுள் புதைத்த ஆகத் தொளியுரு
இதுநாள் வரையும் புலப்படா திருந்தது!
தண்ணெனும் காதலே தணலா மாறி
விண்ணினும் விரிவா விளங்கும் தன்மையை
ஐயையின் வாய்மொழி அவட்குணர்த் திற்று!
செய்யருந் திருவினுள் செம்மல்மேற் செலுத்திய
மெய்யருங் காதல் மேனியைக் காய்ச்சினும்
வெய்ய புழுவென அவளுளம் வெதும்பினும்

அதுவே தண்ணென அவட்குக் குளிர்ந்தது!
அதுவே அன்பின் அகப்புலம் கண்டது!
எனவே ஐயையை இதுவரைப் பேணா
மனவுணர் வாலே மதித்துப் போற்றினாள்!
தூய்மையோள் உளத்துத் தோன்றிச் சுடர்விடும்
வாய்மைக் காதலை வணங்கவும் செய்தாள்.
தொட்டுப் பயிலாத் தோகையி னிடத்து
மொட்டுப் போல முகிழ்த்த அன்பே
காதற் பயனாய்க் கனிந்தது கண்டாள்!
ஆதலால் ஐயையின் அன்பைப் போற்றினாள்!
எத்தகைப் புறத்துயர் வரினும் ஏற்றமும்
முற்றுப் பெற்ற அன்பின் முழுமையால்
அகத்துயர் படாமல் இன்பமே அடைவதும்
அகத்தொளி பெறுவதும் ஐயைபாற் கண்டாள்!
புறத்தொடர்பு அறினும் அகத்தொடர் புற்றதால்
அறத்தின் அமைதியை அவளிடம் உணர்ந்தாள்!
அவன்தோள் பற்றிலள் ஆயினும் ஆயிழை
அவனகம் பற்றி வாழ்வதை அறிந்தாள்!
ஐயையின் பெருமையை அறிய அறிய
மெய்யெலாம் சிலிர்த்தது; மெய்ப்பயன் புரிந்தது!
ஐயையின் உளத்தை அன்புவாழ் கோயிலாய்க்
கைதொழு தேத்தினாள்! காதலை வழுத்தினாள்!
அதன்பின் ஐயைக்கு அணிமணம் நிகழ்த்தும்
புதிய விருப்பினை முதியவள் போக்கினாள்!
ஒண்டொடி மனம்போல் உலாவர விட்டாள்!
தண்டொடிந் திடல்போல் தானமைந் தமர்ந்தாள்!

நாட்கள் ஓடின; திங்களும் நகர்ந்தது!
வாள்தடங் கண்ணியும் முன்போல் வாழ்ந்தாள்!
முதியோள் முதுமை முதுமை உற்றது!
புதிரென் வாழ்வும் பொக்கெனப் போனது!
அன்னைக்கு அன்னையாய் அத்தனுக் கத்தனாய்
முன்னைக்கும் பின்னைக்கும் முழுவழி காட்டியாய்
இனியநற் றுணையாய் ஐயைக்கு இருந்த
கனிந்த அன்பின் கடலெனும் அத்தை
காலப் புயலுள் கலம் போல் மூழ்கினாள்!

கோலப் புருவோ ஓலத்துக் குமைந்தது!
பிரிவால் துடித்தது! பேதுறக் கசிந்தது!
சரிந்த வாழ்க்கையில் சருகாய்க் காய்ந்தது!
ஏமப் பெருந்துயர் ஏற்றே
ஊமை நிழலென உலாவினாள் ஐயையே!

(10)

அன்பே அருளா அருளே காதலாய்
வன்மை பெற்று வாழ்ந்த ஐயை
அசைவிலா தசைந்தாள்! அன்புரு வாகினாள்!
இசைவிலா தித்தரை இறங்கிய சுடர்ப்போல்
வாழாது வாழ்ந்தாள்! வாழ்ந்து துவண்டாள்
பாழாய்ப் போனது பைங்கொடி இளமை!

ஆண்டுகள் ஐந்தும் ஓடின! ஐயை
வேண்டுதல் வேண்டாமை விலக்கிய மனத்தொடு
நாளும் குன்றம் நாடுவாள்! நாடிக்
கோளொடும் காரொடும் கதிரொடும் பேசுவாள்!
இயற்கை அழகெலாம் அவளுக் கினித்தது!
மயற்கை சாரா மனத்தொடு மிதந்தாள்!
"என்றைக் காகிலும் ஏந்திழை உளத்தில்
நின்று சுடர்விடும் அத்தான் நேரிலே
வந்து தன்னை வாழ்க்கையில் அமர்த்துவான்!
வெந்து தீய்த்திடும் தனிமையை வீழ்த்துவான்!"
என்றே ஐயை எண்ணி யிருந்தாள்!
அன்றைய நாளும் அவள்முன் வந்ததே!

ஒருநாள் நகர்வழி ஒருவனின் உருவம்
தெரிந்தது! ஐயை திகைப்புற ஓடினாள்!
கற்களும் முட்களும் காலில் தெறித்தே
பொற்புறு பாவையின் போக்கைத் தடுத்தன!
ஓடினாள்! ஓடினாள்! உள்ளகம் நிறைந்தோன்
வாடி வருவதாய் எண்ணி ஓடினாள்!
உருவமும் வந்தது! ஓடினாள்! ஆயினும்
திருவுளம் நிறைந்த தெய்வம்அஃ தில்லெனக்
கண்டதும் கண்ணீர் கழன்றிட நின்றாள்!

விண்டுரை கூறா வெய்துயர் கொண்டாள்!
எதிர்ந்தோன் தோள்மேல் இரண்டாண்டு நிரம்பிய
செதுக்கிய வடிவிலோர் சிறுவன் கிடந்தான்!
வந்தோன் முகத்தில் வெயர்வை வழிந்தது!
நொந்த துயரினால் நொடிப்புண் டவன்போல்
காணப் பட்டான், கன்னி போய் நின்றதும்
மாணப் பணிவொடு மங்கைபால், "அம்மா,
புதினிக் குன்றத்துப் புலியூர் என்பதும்
இதுதா னே!" எனக் கேட்க, இருங்குழல்
'இதுவே' என்ன, "இவ்வூர் தன்னில்,
முதியோள் ஒருத்தி முத்தம்மை என்பாள்
குடிலினைக் காட்டக் கூடுமோ?" என்றாள்.
இடிவிழுந் ததுபோல் ஐயை, 'ஏன்?' என்றாள்.
"அவர்களின் பிள்ளை அனுப்பினார் எனை" என
'அவர் பெயர் என்னென ஐயையும் கேட்கச்
"செம்மல்" என்றான்; உடலம் சிலிர்த்தது!
வெம்பிக் கசிந்தது விதிர்ப்புறு நெஞ்சம்!
புதியவன் மேலும் ஐயையைப் புரிந்து
பதைப்புறு நெஞ்சொடும் பல்குகண் ணீரொடும்
ஓராண் டாகத் தும்பைநோ யுற்றுடல்
தேரையாய்த் தேய்ந்து சென்ற திங்களில்
மாண்டு போனதும், செம்மல் மகனொடு
நீண்ட பெருந்துயர் நேர்ந்த கவலையால்
எண்ணி எண்ணி இராப் பகல் அழுததும்
உண்ணலும் உறக்கமும் ஒதுக்கித் துவண்டதும்
ஆறாக் கவலையின் அணைப்பைத் தாளாது
மாறா துழலும் மனத்துயர் மாற்றிடப்
பின்னர் பெரும்படை சேர்ந்ததும் பிள்ளையைத்
தன்னிடம் தந்தே அன்னையார் தம்மிடம்
ஒப்படைத் திடவே வேண்டி உரைத்ததும்
அப்பணி மேற்கொண் டங்கு வந்ததும்
ஆராத் துயரோ டழுது கூறினான்!
வாராப் பெருந்துயர் வந்ததாய் வால்விழி
பையனை உள்ளம் பதைப்புறப் பறித்துச்
செய்ய முகத்தினில் செம்மலைக் கண்டுளம்

அளாவிப் படர்ந்த அன்பெலாம் சேர்த்துயிர்
கலாவி அணைத்துக் கண்ணிலும் வாயிலும்
பனித்த செவ்வாய்ப் பவள இதழ்களால்
இனித்திட இனித்திட ஏழா யிரமுறை
முத்தம் பொழிந்து முரல் இளமையின்
பித்தம் தணிந்தனள்! பேதை யோளே!

(11)

செல்வனைக் கொணர்ந்தோன் சென்றபின் ஐயை
மல்கு நீர்விழி மறைப்பத் திரும்பினாள்!

அத்தான் பிள்ளை அரிமாக் குருளை!
முத்துச் சிரிப்பு! மொய்த்த கருவிழி!
மென்மைச் சுருள்மயிர்! மெல்லிய தாடை!
இன்புறும் மேனியை எடுத்துச் சிற்றிடை
மெய்யோ டணைத்துக் கனவின் மிதந்தாள்!
பொய்த்த வாழ்க்கை பொய்த்துப் போனது.
உலகெலா மலர்ந்து மங்கையர் உளம் படர்ந்து
அலகிலா தூறிய அன்பெனும் ஊற்றுச்
சேயிழை உளத்துச் சிலிர்த்த நாள் முதலா
வாய்த்திடா இன்பம் சிறியோன் வருகையால்
பெருக்கொடுத் தோடிப் பிறவிப் பேற்றுக்கே
உருக்கொடுத் துயிரை உவகையில் தோய்த்தது!

நம்பிக்கை தந்த சிறுவனை நங்கை
'தம்பி! உன்பெயர் சாற்றெ'னக் கேட்டாள்!
சிமிழ்வாய் திறந்து 'சேரன்' என்றான்!
தமிழாய் இனித்தது மழலைத் தேன்மொழி!
'முத்தே நான்யார்? மொழிகெ'னக் கேட்டாள்!
'அத்தை' என்றான் அழகுவாய் திறந்தே!
ஐயையின் விழிகளில் அரும்பியது கண்ணீர்!
"உய்விலாள் என்னை உன்பூ வாயால்
அம்மா என்றே அழையடா கண்ணே!"
என்று கெஞ்சினாள் ஏந்திழை! அவனும்
செம்மா துளையிதழ் சிரித்திட மலர்ந்தே
'அம்மா' என்றான்! அள்ளி எடுத்தே

ஆறுத லோடே அணைத்தவா 'றின்னும்
நூறு முறைசொல் நுங்குவாய் திறந்து' என,
'அம்மா! அம்மா!' என்றே அடுக்கினான்!
விம்மும் நெஞ்சொடு விழிகளை மூடிக்
கொந்தலர் தேன்வாய்க் குதலை மொழிந்த
செந்தமிழ்ச் சொற்களை நெஞ்சினுள் செரித்தாள்!
உள்ளம் இனித்தது! உடல்பூ ரித்தது!
கள்ளம் இலாதாள் கனவு மெய்யானது!
அத்தை சாற்றிய அரும்பெருந் தாய்மை
வித்திவள் உளத்தில் முளையிட்டு வளர்ந்து
பெருமர மாகிப் புடைமிக விரிந்து
சிறுமுகை பூத்துச் சிலிர்த்து மலர்ந்து
நறுமணம் கமழ்ந்து நான்கு திசையிலும்
இறைத்து நிறைந்ததை ஏந்திழை கண்டாள்!
சிறுவன் உருவினில் செம்மலின் உருவை
அறம்பூண் நெஞ்சின் அன்பினுள் கண்டாள்!
போதலர் தாமரைப் பூவென மலர்ந்த
காதல் உள்ளம் தாய்மையாய்க் கனிந்ததே!
வளமை கொழுவி வார்ந்தெழுந் தளாவிய
இளமை நெஞ்சில் இறைமையை நிறைத்தது!
வேரித் தடங்கண் வேய்தோ ளிக்குமுன்
பூரித்த மார்பகம் தாய்மையால் புலர்ந்தது!
அகனமர்ந் தாவியும் அலர்ந்துவாய் அலர்ந்து, 'என்
மகனே!' என்றாள் 'ஏந்தலே!' என்றாள்.
"வாழ்விலாள் எனக்கு வாழ்வைக் கொடுத்துத்
தாழ்வைப் போக்கிய தெய்வமே!" என்றாள்.
போற்றிப் புகழ்ந்தாள்; புதுமையாள் பிறவிப்
பேற்றை அடைந்ததாப் பெருமிதங் கொண்டாள்!
கமழ்வாய் முகர்ந்தாள்! கவினிடை நோகச்
சுமந்து திரிந்தாள்! கதைபல சொன்னாள்!
அவனோ டுண்டாள் அவனோ டாடினாள்!
அவனொடு துயின்றாள்! அவனோ டெழுந்தாள்
காதல் நுகராக் கன்னி இளமான்
மாதர் தெய்வம் மங்கையர் விளக்கம்
ஐயையின் நெஞ்சில் அன்னையின் உணர்வே

மெய்யொளிச் சுடராய் மிளிர்ந்தது கண்டீர்!
சிறுவன் வந்தபின் செம்மலின் எண்ணம்
உறுத்துதல் குறைந்தது: என்னினும் உறக்கத்து
அன்னவன் நினைவும் அவளகம் மொய்த்தது!
அன்ன பொழுதெலாம் அனல்மெழு கானாள்!
தோளில் மகனைத் தூக்கிய வாறு
நாளும் ஐயை குன்றம் நாடுவாள்!
வெந்துயர் பொருத இளையோன் ஆகையால்
தந்தையின் நினைவைத் தளிர்கொடி ஊட்டிலன்!
ஆட்டுக் குட்டியோ டவன்விளை யாடிட
நாட்டுவாள் அவள்விழி நகர்செலும் பாதையில்!
''என்றோ ஒருநாள் ஒந்தலும் வருவான்!
அன்றிலை மணப்பான்; அணைப்பான்'' என்றே
ஏங்கிட நாட்களை எண்ணினாள்! ஆனால்
ஆங்கோர் உண்மை ஐயை அறியாள்!
அதுகாண் செம்மலின் ஆருயிர்
எதிர்ந்த படைமுகத் திறந்த தென்பதே! (முற்றும்)

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு	கொழும்பு	வெளி நாடு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7–25 உருபா	9 உருபா
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்	(இரு வண்ணம்)	100 உருபா
,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா
உள்ளே முழுப்பக்கம்		50 உருபா
,, அரைப்பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

அச்சாகு நூலெல்லாம் நூலாமோ ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ ? – முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு !

தொழில் நுட்பம்

கோவைத் தொழில் நுட்பக் கல்லூரி முத்தமிழ்மன்ற வெளியீடு-
(வரிசை–3)

வளர்ந்து வரும் அறிவியல் நுணுக்கங்களையெல்லாம் தமிழிற் கொள்வது இயலாது என்னும் தமிழ்ப் பகைவர்க்கும், அவ்வாறே கொணரினும் அதற்கேற்ற கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்கிக் கொண்டிருத்தல் அரிதும் வேண்டாததும் (அவர்தம் அரைகுறை அறிவின்படி) ஆகலான் அவ்வத் துறையில் வழங்கும் பிறமொழிக் கலைச் சொற்களை அவ்வாறே தமிழிலும் வழங்குதல் வேண்டும் என்னும் தமிழகத் திண்ணைத் தூங்கிகட்கும் அறைகூவலாக ஆங்காங்குத் தமிழ் இளைஞர்கள் தனித்தமிழ் உணர்வுடன் மொழியாக்க, கலைச்சொல்லாக்கப் படைப்புகளில் ஈடுபடுவதனைக் காண்கின்ருேம். அத்தகைய முயற்சிகளில் ஒன்றே கோவைத் தொழில் நுட்பக் கல்லூரி மாணவரின் வெளியீடான இத்தொழில் நுட்பம் என்னும் இதழாகும். ஆங்காங்குக் குறைகளிருப்பினும், முயற்சி பாராட்டத் தக்கதேயாம். மின்னியல், பொறியியல், வேதியல், கட்டிடவியல், பொதுவியல் போன்ற பலதுறைகளிலும் உள்ள பயனுள்ள செய்திகள் தமிழாக்கித் தரப்பெற்றுள்ளன. கலைச் சொற்கள் பெரிதும் தனித்தமிழ்க் கண்ணேட்டத்துடன் ஆக்கப் பெற்றுள்ளன. புதிது புதிதாக வரும் ஆங்கிலத் தொழில் நுணுக்கச் சொற்கட்கெல்லாம் சிறிதும் இடர்ப்பாடின்றித் தமிழ்ச் சொற்கள் மாணவ உள்ளங்களினின்று உருவாகி வருவது மகிழத் தக்கது.

சிலவிடத்து மூலச்சொற்கள் அவ்வாறே கையாளப்பட்டுள்ளன. மேலும் முயன்றால் அவற்றுக்கும் தமிழிற் சொற்கள் கண்டுபிடிக்க முடியும் என மாணவர்க்குக் கூற விரும்புகின்றோம்.

பெரும்பாலான கட்டுரைகள் கூறவந்தவற்றைத் தெளிவாக விளக்குகின்றன. ஒருசில கட்டுரைகள் (எ.டு.) மின்னழுத்த இரட்டிப் பாக்கி) எண்ணப் பரிமாற்றமில்லாத வெறுஞ் சொற்பெயர்ப்பாக இருப் பதனால் தெளிவில்லை.

மாணவர்தம் உள்ளப்பாங்குக்கேற்ப அவர்தம் தமிழாக்கம் காணப் படுகின்றது. உலோகத் துகளியல் என்ற கட்டுரையில் வழக்கில் வந்து விட்ட தமிழ்ச் சொற்கள் தாமும் கையாளப்படாமல் ஆங்கிலச் சொற் களே எடுத்தாளப் பெற்றுள்ளன. உலோகம், சலனி போன்ற வட சொற்களும் கலந்துள்ளன. கருத்து விளங்கினால் மட்டும் போதாது. மொழியும் தூய்மையாக அமைதல் வேண்டும் என்பதை மாணவர்கள் ஒருசிலர் புரிந்து கொள்ளுதல் நலமாகும். தனித்தமிழ் என்பது ஏதோ ஒரு தனிப்பட்ட கூட்டத்தினரின் தனிப் போக்கான கொள்கை யன்று; மொழியின் தூய செப்பமான, இயற்கையான வடிவமே! அதனைக் கையாள வியலாதார் மொழிச் செப்பம் கைவரப் பெற்றிலர் என்றே கூறல் வேண்டும். ஆங்கிலச் சொற்களின் இடத்தில், தமிழ் என்ற பெயரால் வடசொற்கள் நிறுத்தப்படுமாயின் அதற்கென்று அந்தத் தனிமுயற்சிதான் எதற்கு? ஆங்கிலச் சொற்களையே பயன் படுத்திக்கொள்ளலாம்!

Formula என்பதனை நூற்பா என்றும், **Contractor** என்பதனை ஒப்புதலர் என்றும் பெயர்த்துள்ளனர். முறையே வாய்பாடு, குத்த கைக்காரர் என்பன பொருந்தும். சுண்ணும்புச் சதை என்பதே சுதை யாக மாறியதாக ஒருபாற் கூறப் பெற்றுள்ளது. இது பிழை. சுதை என்பதே சரியான வடிவமாகும். (சுள் + தை — சுதை சுடப்பட் டது எனும் பொருளது) சிறப்பிதழ்ப் பகுதியிற் காணப்படும் பாடல்கள் மாணவரின் ஆர்வத்தைக் காட்டுவன வேனும் அவற்றிற் பிழைகள் மலிந்துள்ளன. தொழில் நுட்பம் பயில்வோர் பாடல் துறையிலும் உள்ளம் செலுத்துவது பாராட்டத் தக்கதேனும், அத்துறையிலும் செப்பத்தினை நாடுவது மேலும் சிறப்பாகுமன்றோ!

(அடுத்துவரும் வெளியீடுகள் குறைநீங்கி வரும் என நம்புகின் றோம்).

— கல்லாடன்:

"சமதர்ம சமுதாயத்தில்"

பாடல்கள். (இலவச வெளியீடு)

ஆசிரியர்: வை. மு. கு. சகுந்தலா, கும்பகோணம்

உணர்வானும் கருத்தானும் யாப்பானும் சிறிதும் செப்பமில்லாத பாடல்கள் இவை. நல்லுணர்வு இழையோடிருப்பினும், மேம்போக்கானதே! பெரும்பாலான பாடல்கள் பெரியாரின் தற்காலத் தடுமாற்றக் கொள்கைகளின் எதிரொலியாகவே உள்ளன: ஆயினும் தமிழன்பு காட்டப்படுகின்றது.

இப்பாடல்கள், செந்தமிழ்க் காவலர் பர். அ. சிதம்பரநாதன் அவர்களால் திருத்தப் பெற்றவாக முன்னுரையிற் கூறப்பட்டுள்ளது. எவ்வகையாலும் திருத்தம் பெற்றவையாக இப்பாடல்கள் தோன்றவில்லை. தமிழ்க் காவலர் என்போர் தமிழ் நலந்தான் கருதாவிடினும் தம் பெயர்களைக் காத்துக்கொள்தற்காவது செய்வன திருந்தச் செய்தல் வேண்டும். அல்லது, ஒன்றைச் செய்யப் போதிய ஓய்வோ, அக்கறையோ இல்லையாயின் அதனைச் செய்வதாக ஏற்றுக் கொள்ளாமலாவது இருத்தல் வேண்டும்.

பாட்டின் புறவடிவம் (யாப்பு) தானும் சரியாகக் கைவரப் பெறுமுன் நூற்களை அச்சேற்ற நினைப்பது வியப்பே. இந்நூலை எழுதியவர் இனியேனும் யாப்பிலக்கணம் கைவரத் தேர்ந்து கருத்தானும், உணர்வானும் வடிவானும் சீர்மையும் ஆழமும் வாய்ந்த பாடல்களை எழுதும் முயற்சியில் ஈடுபட வேண்டுகின்றோம். ஓரளவுக்காவது செப்பம் அடைந்த பின்பே நூற்கள் அச்சேற்றப் படுமானால் அஃது எழுதியவர்க்கும் நல்லது; இலக்கியத்துக்கும் நல்லது.

— கல்லாடன்.

முகவர்கள் கவனிக்க

(1) முகவர்களுக்கு விடுக்கப் பெறும் படிகள் யாவும் சரிபார்த்தே விடுக்கப் பெறுவதால் இடையில் நேரும் தவறுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.

(2) முகவர்கள் விடுக்கும் பணவிடைகளையும், பதிவஞ்சல்களையும் தனிப்பட்டயார் பெயருக்கும் விடுக்காமல் அமைச்சர் தென்மொழி என முகவரியிட்டே விடுக்க வேண்டுகின்றோம்.



மக்களவை

முறையாகுமா ?

அன்புடையீர்,

நான் விலங்கியல் பட்டம் பெற்றவன். தமிழ் மொழியை இரண்டாம் பிரிவில் கற்று ஐம்பது விழுக்காட்டுக்கும் மிகுதியான மதிப்பெண்கள் பெற்றுத்தேறியவன். நான் மதுரைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம். ஏ.இல் சேர விண்ணப்பித்திருந்தேன்.

அதற்காக நேர்முகத் தேர்வுக்கும் அழைக்கப்பட்டேன். நேர்முகத்தேர்வின்போது துணைவேந்தர் தெ. பொ. மீ கேள்வி கேட்டார். அப்போது அவர், நான் துணைப்பாடமாகப் படித்த வேதியலில் ஒரு முறை தவறிவிட்டதால், எனக்குத் தமிழ் எம். ஏ. இற் சேர இடம் அளிக்க இயலாது என நேர்முகமாகவும் மறைமுகமாகவும் கூறிவிட்டார்.

நான் தமிழில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தபோதும், வேதியலில் ஒருமுறை தவறிவிட்டதால் தமிழ் எம். ஏ. இற் சேரத் தகுதியற்றவன் எனக் கூறப்பட்டபோது வேடிக்கையாகவும் துயரமாகவும் இருந்தது. இவர்கள் கூறும் காரணம் ஒரு நொண்டிச் சாக்குதான் என்பது தெற்றென விளங்கிவிட்டது. அதுபோன்றே என் நண்பர்களும் பிற ஆசிரியர்களும் "நீ இன்னார் மகன் (பேராசிரியர் இலக்குவனார் மகன்) என்பதால்தான் உன்னைத் தமிழ் எம்.ஏ. இல் சேர்க்கவில்லை'' எனக்கூறினர்.

தனிப்பட்ட ஒருவர் மீதுள்ள காழ்ப்பைக் காட்டப் பல்கலைக்கழகத்தைக் கருவியாகப் பயன்படுத்திக் கொள்வது சான்றோர்க்கழகாகுமா? நடுநிலை பிறழாது, ஓர்ந்து கண்ணோடாது, இன்னார் இவர் நமக்கினியர் என எண்ணாது, தோந்தெடுக்க வேண்டிய இவர்கள் தனக்கு வேண்டாத ஒருவரின் மகன் என்பதற்காக மாணவன் ஒருவனின் வாழ்வைப் பாழாக்குதல் முறையாகுமா? கற்றறிந்த பெருமக்களே, கவின்தமிழ்ப் புலவர்களே ஓரகம் செய்ய ஒருப்பட்டால் பிறர் நிலை என்ன! இன்னும் சரிவரச் செயல்படாத மதுரைப் பல்கலைக் கழகத்தில் தொடக்கத்திலேயே இத்துணைக் கொடுமைகள் என் ?

சி. 17, திருநகர்
மதுரை-6.

இங்ஙனம்,
இ. மறைமலை, பி. எசி.

விலங்கியல் :

உயிரிகளின் வேலை முறை மாற்றம்

(SHIFT SYSTEM IN NATURE)

சா. ஆபிரகாம். எம். ஏ., எம். எசி., எல். டி.
முதுகலை விலங்கியற்றுறைத் தலைவர்,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

காலையில் பஞ்சாலையில் சங்கொலி முழங்குகின்றது. தொழிலாளர்கள் ஆலைக்குச் செல்கின்றனர். பிற்பகலில் நான்கு மணிக்கு மறுபடியும் சங்கொலி வானைப் பிளக்கின்றது. அப்பொழுது, பகற்பொழுதில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஆலையை விட்டு வெளியேறித் தத்தம் அகத்துக்குச் செல்கின்றனர்; இராப்பொழுதில் பணியாற்றும் தொழிலாளர்கள் ஆலைக்குட் சென்று, தத்தம் வேலைகளைத் தொடங்குகின்றனர். மறுநாள் விடியற்காலையில் சங்கொலி முழங்கியதும் இராப்பொழுதில் வேலைசெய்த தொழிலாளர்கள் வெளியேறுவதும், பகற்பொழுதில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஆலைக்குள் நுழைவதும் முறையாக நடைபெறுகின்றன. இவ்வொழுங்கு, வேலை முறை மாற்றம் (Shift system) என்று அழைக்கப்படும். நெருக்கடியான காலத்தில், இவ்வாறு மும்முறை வேலை மாற்றங்கள் கூட நடைபெறும்.

இவ்வாறே, இயற்கை யன்னையின் பல்லுயிரிகளும் மாறி, மாறிச் செயற்படுவது கண்கூடு. இயற்கைப் பஞ்சாலையில் முதற் சங்கொலி, ஏறத்தாழ விடியற்காலை நாலரை மணிக்குக் கேட்கும். அச் சங்கொலியை முழக்குபவர் திருவாளர் கூண்டுக்கரிச்சான்! அச் சங்கொலி, பஞ்சாலையின் சங்கொலி போன்று வன்மையுடையதன்று; இனிமையுடையது. மீனம் (பங்குனி) முதலாக விடை (வைகாசி) ஈறுகக் கருங்குயிலின் அருங்குரல் காலை ஐந்து மணிக்குக் கேட்கும். பின்னர், கரிச்சான் தன் சங்கொலியைப் பரப்பும், கடைசியாகக் காகமும் சிட்டும் தங்கள் குரல்களை எழுப்பும். கானிற்றிரியும் கானங்கோழியின் காலையொலி, செவிக்கினிய சிறந்த உணவாகும். பின்னர், பகற் பணியாளர்களாகிய பல்வகைப் பறவைகளும், மான் மரைகளும் உணவு தேடச் செல்கின்றன; ஆடு மாடுகளும் இரை தேடப் போகின்றன. பகலிலே மிகுதியாகச் செயற்படும் விலங்குகளைப் போன்றே

பூச்சியுண்ணும் புட்களாகிய பனங்குறும்பூழும் (பனங்காடையும்) மைநாகப்புள்ளும் (பூவை) பஞ்சுவிட்டானும் (Bee Eater), கரிச்சானும், சிட்டும் பகலில் இரை தேடுகின்றன. பூச்சியினங்களிலே தேனீக்களும், வண்ணத்துப் பூச்சிகளும், பூக்களில் தேன் எடுத்தும் தாதினைச் சுமந்து சென்று சூலுறுத்தியும் திரிகின்றன, இவ்வுண்மையைத் தண்டமிழ்ப் புலவர் ஒருவர், "தத்தித் தாதூதுதி; தாதூதித் தத்துதி; தத்தித்துதைதி; துதைத்துத்தாதூதுதி" என்று தகர வரிசையில் யாத்துள்ள ஒரு சிறு பாட்டில் தந்துள்ளார். புலாலுண்ணும் புட்களாகிய பருந்தும், கழுகும், வல்லூறும் தமக்குரிய அலுவல்களில் ஈடுபடுகின்றன. ஆனால், புலாலுண்ணும் பாலூட்டிகளாகிய (Carnivorous mammals) நரியும், ஓநாயும், கரிநிறக் கரடியும், வரிப்புலியும் பகல் நேரத்தில் வெளிவரா. அவ்வாறே ஆந்தையும் கூகையும் பகலில் இயங்கா. பெரும்பாலான கொக்கு வகைகளும் நாரைகளும் பகற்பொழுதில் இயங்கும் தன்மையன.

மாலையாகின்றது; மலர்தலை உலகை மல்கிருள் சூழ்கின்றது. முழைஞ்சுகளிலும், கூடுகளிலும், மரப் பொந்துகளிலும் பகல் முழுதும் துயின்ற விலங்குகள், இராப்பொழுதில் துயில் நீங்குகின்றன; இவை இராப்பொழுதில் இயங்கும் தன்மையன. இரவுச் சங்கொலிகள் முழக்கப்படுகின்றன. ஆந்தைகளும் கூகைகளும் அலறுகின்றன எண்ணிறந்த இன்னிசைப் பூச்சிகள் பல்லியங்கள் இசைக்கின்றன. (பூச்சிகளின் உடம்பில் பல இசைக்கருவிகள் போன்ற உறுப்புகள் உள்ளன.) இந்நிலையைத்தான் 'மணிமேகலை'யின் ஆசிரியர்.

"குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய"

என்று வண்ணனை செய்கின்றார் போலும்! பகலில் இயங்கும் பறவைகளும், பிற விலங்குகளும் தத்தம் சேக்கையடைகின்றன. இக்காட்சியைப் பழந்தமிழ்ப் புலவர் ஒருவர் பின்வரும் அடிகளில் சொல்லோவியமாகத் தருகின்றார் :

"சிறுவெதிர்ங் குழல் போலச் சுரும்(பு) இமிர்ந்திம்மென
பறவைதம் பார்ப்புள்ளக் கறவைதம் பதிவயின்
கன்(று) அமர் விருப்பொடு மன்று நிறை புகுதர
மாவதி சேர மாலை வாள்கொள" (கலி. ககூ).

இரவில் வண்ணத்துப் பூச்சிகளும் பூச்சிகளிலேயே பெரியவான (ஓரிறக்கையிலிருந்து அடுத்த இறக்கை வரைக்கும் அளந்தால் 270

கீழ்நூறு கோல் (centimeter) வரும்) பட்டுப்பூச்சிகளும் உலவு கின்றன. நிலாப் பட்டுப்பூச்சிகள் (Moon-moths) இரவில் பறந்து திரிகின்றன. இவற்றுடன் உருவிற் சிறிதான பூஞ்சிட்டையொத்த சிறுபட்டுப் பூச்சிகளும் (Sphingid) இரவிலே சுறுசுறுப்புடன் திரி கின்றன. பகலில் உழைத்து இரவில் ஓய்வெடுத்துக்கொள்ளும் பூச்சி யுண்ணும் பறவைகளுக்கு மாறாக இரவில், முயற்கிறுந்தி (Stone curlew), பாதைச்குருவி (caprimulgus), பெரிய உள்ளான் குருவி (Scolopax), போன்ற பறவைகள் இரவிலே பூச்சியுண்ணுகின் றன. இம்மூன்று வகைப் பறவைகளும் நாளின் பெரும் பகுதியைத் தரையிற் செலவிடுவன; தரையிற் குழி தோண்டி முட்டை யிடுவன. பகைவர்களிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ள, தற் காப்பு நிறத்தை இப்பறவைகள் பெற்றுள்ளன. இவை தவிர, சிற் றுந்தையும் (owlet) பூச்சியுண்ணும் வௌவால்களும் இரவில் இயங்கு கின்றன. சில பாம்புகளும் பூச்சிகளையுண்கின்றன.

பெரும்பாலும் பாம்புகள் இரவுப் பாட்டாளிகளே. இரவில்தான் அவை மிகுதியாக வெளியே வருகின்றன. வயல்களில் நெல்பயிருக் குச் சேதம் விளைவிக்கும் எலி, சுண்டெலி, முயல் போன்றவை இரவில் அங்குமிங்கும் ஓடித்திரிவன. பாம்புகள் அவற்றை யுண்கின்றன. ஆந்தைகளும் இவ்வெலி, சுண்டெலிகளைத் தவிர்ப்பதில் பங்கு கொள் கின்றன. ஆந்தைகளில், சிற்றுந்தை (Owlet), பெருங்கொம்பாந்தை (Great Horned Owl), மீனுண் ஆந்தை (Brown fish Owl), கழுத்துப்பட்டை ஆந்தை (collared scops Owl), முதலியன குறிப் பிடத் தக்கவை. பதினைந்துவகை ஆந்தைகள் உண்டு என்பர். ஆந்தையின் கண்கள் நுணித்துப் பார்க்கும் தன்மை வாய்ந்தன; காருவா (அமாவாசை) இருளிலும், சிறு சுண்டெலிகளையும் காணும் தன்மை வாய்ந்தன. அவற்றின் இறகுகள் மிகவும் சிறந்த அமைப் புடையவை; விரைவாகப் பறக்கும் பொழுதும் ஒலி எழுப்பாதவை. ஆசையால், இருட்டிலே நடமாடும் முயல், எலி முதலியவற்றை எளி தில் பிடித்துத் தின்று, உழவர்க்கு நன்மை பயக்கின்றன. மீன் கொத்திப் பறவை, பகலில் மீனைப் பிடித்துத் தின்கின்றது. மீனுண் ஆந்தை, இரவில் அவ்வேலையைச் செய்கின்றது. இவ்வாந்தை பயிர் களுக்கு இடையூறாக உள்ள நண்டுகளையும் விரும்பியுண்டு, உழவர்க்கு அரும்பயன் விளைவிக்கின்றது. சிற்றுந்தை, பகலிலும் இவ்வேலையைச் செய்கின்றது. ஓரிணை ஆந்தைகள் ஒரு திங்களில் ஏறத்தாழ 200-300 எலி, சுண்டெலிகள் போன்ற கொறிக்கும் விலங்குகளைப்பிடித்துத்

தின்கின்றன. இவற்றின் கைம்மாறு கருதாத செயல், மாந்தர்கள் போற்றும் தன்மை வாய்ந்தது. பகலிலே குருட்டுக்கொக்கு (Paddy Bird), உண்ணிக் கொக்கு (Cattle egret) முதலியன பூச்சி, தவளை, நண்டு முதலியவற்றை உண்கின்றன. இரவிலே இவ்வேலையை வக்காக்கொக்கு (Night heron) ஏற்றுக் கொள்கின்றது. வேடந் தாங்கல் என்ற மிகச்சிறந்த 'புட்புகலிடம்' (Bird Sanctuary) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது. மாலையில் அங்குச் செல்வோ மானல் பகற்பணியாளராகிய நாரை, குருட்டுக் கொக்கு முதலியவை கூடுகளுக்குத் திரும்புவதும், இரவுப் பணியாளராகிய வக்காக்கொக்கு, கூட்டினின்று இரைதேட வெளியே போவதுமான அரிய காட்சியைக் கண்ணுற் பருகிக் களிக்கலாம். நீலமலை (நீலகிரி) மாவட்டத்தில் முதுமலை என்ற இடத்தில் 'வனவிலங்குப் புகலிடம்' (Wild life sanctuary) என்றுள்ளது. அங்கே, காட்டுமாடு, புள்ளிமான் கூட்டங்களையும், யானையீட்டங்களையும் நாம் காணலாம். ஆனால் அதே காட்டில் பூனை இனத்தைச் சேர்ந்த புலி முதலிய எந்த விலங்குகளை யும் காண்டல் அரிது. நாயினத்தைச் சேர்ந்த ஓநாய், செந்நாய் முத லியவற்றையும் பார்க்க முடியாது. இவை இரவில் திரிவன. விடியற் காலையிலும், இருட்டுவதற்குச் சற்று முன்னரும் இவற்றைப் பார்க்க லாம். இவை தம் இரையைப் பிடிப்பதற்கேற்ற அமைப்புடைய உறுப்புகளை உடையனவாய் விளங்குகின்றன. நடக்கும்பொழுது, ஒலி கிளம்பாமல் இருக்க, இவற்றின் உள்ளங்கால்களில் வன்மையான தசை இருக்கின்றது. மணத்தை நுகர்ந்தும், ஒலியைக் கேட்டும் அறியும் கூரிய புலனுறுப்புகளைப் பெற்றிருக்கின்றன. பூனையின விலங்குகளின் கண்கள் இருளில் மிகவும் பயன்படுவன. ஒளி அவற் றின் கண்களிற்பட்டால், அக்கண்கள் ஒளிரும். கண்களின் அளவிலி ருந்தும், இருகண்களுக்கும் இடையிலுள்ள அளவிலிருந்தும், தரை மட்டத்திலிருந்து அக்கண்கள் காணப்படும் அளவிலிருந்தும், அக் கண்களையுடையவை புலியா, சிறுத்தையா மானு கரடியா என்று அறிந்து கொள்ளலாம் என்று கூறப்படுகிறது.

கரடி, இரவில் இயங்கும் ஒருவிலங்கு; இரவிலே, கறையான் புற் றைத் தோண்டி, கறையான்களையும், புற்றுஞ் சோற்றையும் தின்னும். இதைத் தமிழ்ப்புலவர் ஒருவர் பின்வருமாறு வண்ணிக்கின்றார்.

ஈயற் புற்றத்து ஈர்ம்புறத் திறுத்த
குரும்பி வல்சி பெருங்கை ஏற்றை

தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்
பாம்பு மதன் அழியும் பானாட்கங்குல் அகம். அ.

நள்ளிரவில், நடுக்கானில் ஈரமான ஈசற் புற்றுக்குள் புற்றுஞ்சோறு கருதிக் கரடி கைவிடுகின்றது. ஈசற்புற்றுக்குள் பாம்பு வாழ்வது வழக்கம். அப்பாம்பு கரடியின் வலிந்த கூரிய நகத்தின் பிடிக்குட் பட்டு காயமடைந்து வலிமை யிழக்கின்றது. ஈண்டுப் புலவர், கரடி யின் உணவு (ஈசல்), அஃது ஈசற்புற்றினைத் தோண்டும் பொழுது (இரவு) புற்றில் வாழும் பிறவுயிர் (பாம்பு) கரடியின் நகவியல்பு (மிகக் கூர்மையானது) முதலியன பற்றி நான்கே அடிகளில் நல்லதொரு கட்டுரை அமைத்துவிடுகின்றார்.

முதுமலைக் காடுகளில் அணில் வகைகள் பல உண்டு. பறக்கும் அணில், பேரணில் எனும் இருவகை அணில், பேரணில் எனும் இரு வகை அணில்களில், பறக்கும் அணில் இரவில் நடமாடும். பகலில் அதனைப் பார்க்க முடியாது. பேரணிலோ பகல் உலவியாகும். முய லும் முள்ளம் பன்றியும் இராவுலவிகள். சிலவிடங்களில் பகற்பணியா ளரும் பானாள் பாட்டாளியரும் ஒக்க வாழ்கின்றனர். இலங்கை அரு குள்ள ஒரு தீவில் காகங்களும் வௌவால்களும் ஒரே மரத்தில் வாழ் கின்றன. ஆனால் அவற்றுக்கிடையே எவ்வகையான பூசலும் இல்லை. ஏனெனில் காலையிற் பறந்து சென்று இரைதேடியுண்டு மாலையில் திரும்புகின்றன, வௌவால்கள் மாலையில் இரை தேடச் சென்று காலையில் திரும்புகின்றன. நம் சிற்றூர்களில் ஊர்மக்களால் பாது காக்கப்படும் காவல் மரங்கள் உண்டு. பகலில் வௌவால் அம்மரங் களில் தொங்கிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கலாம். மாலையில் பறவைகள் மரத்தில் வந்து அடையும் பொழுதில் வௌவால்கள் வெளியே சென்றுவிடுகின்றன. இவற்றின் அலுவல் முறை மாற்றம் என்னே! நுணுகி ஆய்வோமாயின், ஒவ்வோர் உயிரியும் தன் வேலையை ஒரு நாளின் குறிப்பிட்ட பொழுதில்தான் செய்வது என்று வைத்துக்கொண்டிருப்பது வியப்பன்றோ!

பெரிய ஆலைகளில் காவற்காரர் இருப்பர். இயற்கையன்னையும் தன் மக்களாகிய உயிர்களைக் காக்கச் சில பறவைகளையும் விலங்கு களையும் காவல் வேலையில் அமர்த்தியுள்ளாள். சிறுத்தையோ, புலியோ பகலில் நடமாடுமானால் குரங்குகள் மரங்களின் மேலிருந்து ஒருவகையான கூச்சல் எழுப்புகின்றன. உடனே மற்ற உயிர்கள்

செய்தியறிந்து ஓடி ஒளிந்து கொள்கின்றன. தென்னிந்தியக் காடுகளில் சிவப்பு மீசை ஆள்காட்டிக் குருவி, மஞ்சள் மீசை ஆள் காட்டிக் குருவி (Red and yellow wattled Lapwing) என்ற இருபறவைகள் உண்டு. காட்டுக்குள் வேட்டைக்காரன் வருவதைக் கண்டு கொண்டால் அவை டிட்–கீ–டூஇட் என்ற அவலக் குரலை எழுப்புகின்றன. உடனே பிற உயிர்கள் எச்சரிக்கையுடன் இருந்து கொள்ளுகின்றன. வேலைக்கேற்ற பெயர்!

ஆப்பிரிக்காவில் ஒரு பறவை கொம்பு மூக்கியின் (காண்டா மிருகம்) முதுகு மீதமர்ந்து அவ்விலங்கின் தோல் பிடிப்புகளில் இருக்கும் ஒட்டுண்ணிகளை உண்ணும். இவ்விருந்திற்குக் கைம்மாறாகக் கொம்பு மூக்கியைத் துன்புறுத்த மாந்தரோ, பிறஉயிர்களோ வந்தால், இப்புள் எச்சரிக்கைக் குரலை எழுப்பும். அணுக்கப் பார்வையுள்ள கொம்பு மூக்கிக்கு இது பேருதவியாகும். உடனே அவ்விலங்கு ஓடி ஒளிந்து கொள்ளும்; அல்லது போருக்கு அணியமாகிவிடும்.

உயிர்கள் ஒன்றோடொன்று போராட வேண்டியது ஒருபுறத்திலிருந்தாலும், மறுபுறத்தில் இயக்க முறைமாற்றங்களாலும், பிறஉதவிகளாலும் ஒன்றுக்கொன்று இடையூறு தராமல் வாழ்ந்து வருவதும் இயற்கையின் வியப்பேயாகும். O

- O விற்பனையாகிக் கொண்டுள்ளது !
- O உங்கள் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுங்கள் !
- O அவர்களைப் பண்புள்ளவர்களாகவும்,நல்ல குடி மக்களாகவும் செந்தமிழ் மறவர்களாகவும் ஆக்கும் தனித்தமிழ்ப் பாற்குடம் !,
- O தேவைக்கு உடனே எழுதுங்கள் !

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்.

தனியிதழ் 15 காசு.

ஆண்டுக் கட்டணம் (மலருட்பட) 2 உருபா.
ஒரு படிக்கு 30 காசு முன்பணம் கட்டும் முகவர்கள் உடனே விண்ணப்பிக்க.

அமைச்சர்.

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

பாறைப் படிவமும் அவற்றின் பயனும்

மு. பெண்ணை நாடன்.

பாறைப் படிவம் (Fossil) என்றால் என்ன ? அவை எவ்வாறு ஏற்படுகின்றன? அவை அமையத் தக்க சூழ்நிலைகள் யாவை ? அவற்றினால் பயன் என்ன ? என்பவற்றைப் பற்றி ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பாறைப் படிவம் (Fossil).

தொல்லுயிர்கள் (Past Living Organism) படிவுப் பாறைகளில் (Sedimentrary Rocks) தக்க சூழ்நிலைகளில் படிந்து புதையுயிர்த் தடயமாக மாறுவதைப் பாறைப் படிவம் என்பர். சிறந்த உயிர்களின் உடலம் முழுதுமோ அன்றிச் சில உறுப்புகள் மட்டுமோ, புதைந்து பாறைப் படிவமாக மாறும்.

பாறைப் படிவம் அமையும் முறை:—

பாறைப் படிவங்கள் படிவுப் பாறைகளில் மட்டுமே அமையமுடியும். எரிபாறைகளிலோ, (Igneous Rock) அல்லது புற உருமாறும் பாறைகளிலோ (Metamophoric Rock) அமையா வென்பதை நினைவில் கொள்ளல் வேண்டும். களிமண் படிவுகள் வெள்ளோட்டத்தினால்தான் ஏற்படும். இறந்த உயிர்களின் உடலங்கள், தழை, இலை, வேர் போன்றவை அக்களிமண் படிவுகளில் படியும். நாளடைவில் நீர்வற்றுவதாலும், படிவுகளின் அழுக்கத்தாலும் இறுகிக், கடினத் தன்மை பெற்றுப் பாறைப்படிவுகளாக மாறும்.

வேண்டிய சூழ்நிலைகள்:

1. பாறைப் படிவுகள் அமைய படிவுப் பாறைகள் வேண்டும்.
2. தொல்லுயிர்களின் எலும்புக் கூடுகள் திண்மையாக இருத்தல் வேண்டும்.
3. இறந்த உயிர்களின் மீது களிமண் படிவுகள் படியும்படியான வெள்ளோட்ட வாய்ப்பு வேண்டும். மேலும், குளிர் பகுதியாயின் உறைபனி வேண்டும்.

பாறைப் படிவங்களின் வகைகள்:-

பாறைப் படிவங்கள் இரண்டு வகைப்படும்.

1. மாற்றமுருத் தொல்லுயிர்த் தடயம் (Unaltered Remains)
2. மாற்றமுற்றத் தொல்லுயிர்த் தடயம் (Altered Remains)

என்பன.

மாற்றமுருத் தொல்லுயிர்த் தடயம்:-

இயைபியலினுல் (Chemistry) எதும் மாற்றமடையாமல் அமையும் பாறைப் படிவமே மாற்ற முருத் தொல்லுயிர்த் தடயம் எனப் படும். இவ்வாருன மாற்றமுருத் தொல்லுயிர்த் தடயங்கள் குளிர் பகுதிகளிலேயே (Artic Regions) ஏற்படும். பனிக்கட்டிக்குப்பொருள்களின் தன்மையினை பாதுகாக்கும் பண்பு உண்டு. குளிர்ப்பகம் (Refrigirator) பொருள்களைக் காப்பது போன்று இறந்த உயிர்களைப் பனிக்கட்டிகள் இயைபியில் மாற்றமுருமல் காக்கின்றன. இவ்வாருன மாற்றமுரு உயிர்த் தடயங்கள் சைபீரியாவில் மிகுதியாக உள்ளன. இப்பகுதியில் பாலூட்டி இனத்தைச் சார்ந்த (Mammals) யானை போன்ற உல்லிமாமத்து (Wolly mammoths) மாற்றமுரு உயிர்த்தடயமாக படிந்துள்ளது இக்கருத்தை வலியுறுத்தும்.

மாற்றமுற்ற உயிர்த் தடயங்கள்:—

இயைபியல் வினையால் (Chemical Regions) இறந்த உயிர்கள் மாற்ற முற்றுப் படிவங்களாக மாறுவதை மாற்றமுற்ற உயிர்த்தடயம் என்பர். காட்டாகக் கிளிஞ்சில் என்ற கடல்வாழ் உயிரில் சுண்ணமாழை யுள்ளது. நீரணுத் திரள்கள் (Water molicules) கரியத்தோடு சேர்ந்து கரிப்புளியமாக (Carbonic acid மாறி, சுண்ண மாழையைச் சுண்ணக்கரியகையாக (Calicum carbonate) மாற்றும். மாற்ற முற்ற உயிர்த் தடயங்களை மரத்திண்மையம் (Pertrificatio1) மாழை மாற்றுவம் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(அ) மரத் திண்மையம் (Pertrification):- மரங்கள் உயிர் அணுத்திரள்களால் (Cellulose) ஆனவை. கனிமங்கள் நுண்ணணுத் திரள்களினூடே சென்று, திண்மை நல்குவதை மரத்திண்மையம் என்பர். குறிப்பாக மணலங்கள்தாம் (Silica) திண்மை நல்கும்.

(உ) மாழை மாற்றுவம்:- (Permineralisation) மாழைகள் ஒன்றிற்கு மாறாக மற்றொன்று இடப் பெயர்ச்சி கொள்வதை மாழை மாற்றுவம் என்பர். அஃதாவது, சுண்ணச் சுதை மாற்றுவம் (Calcification) கந்தக மாற்றுவம் (Sulfonification). மணலக மாற்றுவம் (Silicification) எனப் பல பிரிவுபடும்.

(1) சுண்ணச் சுதை மாற்றுவம் (Calcification):- சுண்ணக் கற்கள் (Lime stones) கரிப்புளியத்தினால் (Cabonic acid) இயைபியல் வினையேற்றுச் சுண்ணக் கரியமாக (calcium Carbonate) மாறும். தவிர, நத்தை இனத்தைச் சார்ந்த கடல் வாழ் உயிரினங்களின் (Molussca) புறக்கூடுகள் சுண்ண மாழையால் அமைந்துள்ளன. கரிப்புளியத்தின் இயைபியல் வினையால், சுதையாக, களிமண்ணுடன் சேர்ந்து சுண்ணச் சுதை மாற்றுவம் என்ற பெயர் ஏற்கும்.

(2) கந்தக மாற்றுவம் (Sulfonification):- கந்தகம், நீரணுத் திரள்களால் கந்தகப் புளியமாக மாறும். சில கடல்வாழ் உயிர்கள் கந்தக மாழையால் ஆக்கப்பட்டுள்ளன. கந்தகப் புளியத்தின் இயைபியல் வினையால், கந்தக மாழையும் மேலும், மிகும். 'கிராப்டோலைட்' (Graptolite) என்னும் கடல் வாழ் உயிர் இவ்வாறு கந்தக மாற்றுவம் பெறும்.

(3) மணலக மாற்றுவம் (Silicification):-

நீரில் மணலக மாழை (Silica) உண்டு. மரங்களின் வேர்கள், நீரினை உறிஞ்சுங்கால், மர நுண்ணணுத் திரள்கள் (collulose) இடம் பெயர்ந்து மணலக மாழையங்களாகச் சென்று அடையும். இவ்வாற்றால், மரங்கள் பாறை போன்று திண்மையுடன் காணப்படும். மணலக மாற்றுவ மரங்கள் புதுவை அருகே "திருவக்கரை"யில் காணலாம்.

பதிப்புகள்.- (Imprints)

மாற்றமுறாத் தொல்லுயிர்த் தடயங்கள், மாற்ற முற்றத் தொல்லுயிர்த் தடயங்கள் என இருவகைப் பாறைப் படிவங்கள் தவிர, பதிப்புப் பாறைப் படிவங்கள் என மற்றொரு வகைப்பாறைப் படிவமும் உண்டு. நுண் துகளால் ஆன களிமண் படிவுகளில் பறவைகளின் அடிகள் பதிவதனாலும், கடல் வாழ் உயிரான இழுதுமீன் (Jelly fish) பதிவதனாலும் பதிப்புப் பாறைப் படிவங்கள் ஏற்படும்.

(4) பூஞ்சன என்பு உரு அமைப்பு:- (A mould of skeleton) கடல் வாழ் உயிர்களின் கூடுகள் (Shells) பூஞ்சன உரு அமைப் புப் பெறுவதுண்டு. உயிர் இறந்தவுடன் அவற்றின் உடல் திசுக்கள் கரிப்புளியத்தால் கரையும். ஆயின் மேற்புறக் கூடுகளை மையமாகக் கொண்டு, படிவுகள் படியும். இவ்வாறான வற்றைப் பூஞ்சன என்பு உரு அமைப்புப் பாறைப் படிவங்கள் என்பர். இனிப் பாறைப் படி வங்களின் பயனைப் பற்றி ஆய்வோம்.

பயன்கள்:—

(1) படிவுகளின் கணக்கீடு (Straligraphy)

(2) தொல்லுலகப் புவி அமைப்புமுறை (Palaeogegraphy)

(3) உயிர்களில் படிமுறை வளர்ச்சிக் கோட்பாடு (Evolution) ஆகிய மூன்றனைப் பற்றியும், அறிவதற்கான வாய்ப்பினைப் பாறைப் படிவங்கள் நல்குகின்றன.

1. படிகைகளின் காலக் கணக்கீடு:- (Stratigraphy for Sediments)

எரி பாறையோ, புற உரு மாறும் பாறையோ காற்றைக் கடத்த வல்லனவல்ல. படிவுப்பாறை காற்றினைக் கடத்தும். எனவே அவற்றி னுள் உயிர்கள் வாழல் ஒல்லும்.

படிவுகள் எவ்வாறு அமைகின்றன என்பதனை முன்னர் அறிந் தோம். அவற்றினைப் பற்றிய விதி முறையினை ஆய்வோம், "திண்மை யான பொருள் ஆழ்த்தும், மென்மையான பொருள் மேலும் படியும்" இவற்றனையே படிவு அடுக்கு முறை (Law of superposition) என் பர். விலங்கியல் படிவுமுறை (Law of funna). செடியியல் படிவுமுறை (Law of flora) என இவ்விரண்டு முறைகளினாலும், படிவுகளின் காலத்தைக் கணக்கிட முடியும். இவற்றிற்குப் பெரிதும் உறுதுணை புரிவது புவி இயல் கால அட்டவணை (Geological Time Scale) ஆகும்.

2. தொல்லுலகப் புவி அமைப்பு முறை:-(Paleogeography).

காடுகள் சார்ந்த இடத்து மரங்கள் மிகுதியாக இருந்தன. அம் மரங்கள் புதையுண்டு நிலக்கரியாக மாறியுள்ளன. எனவே நிலக்கரி

தண்டமிழின் தனித் தன்மைகள்

— புலவர். திருமேனி நாகராசன், தமிழாசிரியர், காரைக்கால்.

பழைமை : உலகில் முதன் முதலில் தோன்றிய மொழி தமிழ் மொழியே. அது காலவாராய்ச்சிக் கெட்டாத செம்மாப் புடையது மாம். ஏனைய வையத்து மொழியெல்லாம் மிகப் பிற்பட்டனவே. மாந்தர் இஞ்ஞாலத்து முதலில் தோன்றிய நிலப்பகுதி இலெமூரியாக் கண்டமென்பது ஆய்வுத் துறையில் தோய்வுடையார் கொள்கையாம். அக்கண்டமே பண்டைத் தமிழரால் குமரிக் கண்டமென வழங்கப்பட்ட தென்க. என்னை,

> ''பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
> குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள''

எனவரும் சிலப்பதிகாரச் செந்தமிழ்த் தொடரான் அறிக. அக் * ''குமரிக் கண்டத்தில் முதல் முதலில் மக்கள் இருந்தனர் என்றும்,

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

கிடைக்குமிடம் முற்காலத்துக் காடாக இருந்திருத்தல் வேண்டும். நெய்வேலி முற்காலத்துக் காடா யிருந்தது என்பதனை அறியலாம். அரியலூரில், சில கடல் வாழ் உயிரினங்கள் பாறைப் படிவுகள் கிடைக்கின்றன. இவற்றால் நாம் அறிவது அரியலூர் முற்காலத்து கடல் சார்ந்த பகுதி என்பதாகும்.

3. உயிர்களின் படி வளர்ச்சி முறை:— (Evolution)

உயிர்களின் படிமுறை வளர்ச்சியினைப் பற்றிப் பாறைப்படிவங்கள் அறிவிக்கின்றன. இன்றைய பறவைகள் முற்காலத்து ஊர்வனவாக (Repitles) இருந்தன என்பதற்கு எடுத்துக்காட்டுகள் உள்ளன. தவிர, குதிரை முன்னொருகாலத்து கழுதைக்குட்டி போன்றிருந்தது. மேலும் குளம்புகள் பிளந்து பட்டும் தென்படுகின்றன. ஒட்டகம், மான் போன்றதொரு விலங்கு போல் இருந்திருக்கின்றது. நாளடைவில் சுற்றுப் புறச் சூழலுக்கு ஏற்ப, ஊர்வன, பறவையாகவும் குதிரை விரைவில் ஓடவல்ல. பிளவு படாக் குளம்பு உடையதாகவும், ஒட்டகம் பாலைநிலத்திற்கு ஏற்ப நீண்ட கழுத்துள்ளதாகவும் மாறியுள்ளன என் பதனைப் பாறைப் படிவங்கள் பகர்கின்றன.

---

* பா். மு. வ. இயற்றிய மொழி வரலாறு பக்கம் : 364.

அவர்கள் பேசிய மொழியே உலக முதல் மொழி என்றும் கொண்டால், பழந்தமிழரே முதலில் தோன்றிய மக்கள் என்றும், பழந் தமிழே முதலில் பேசப்பட்ட மொழி என்றும்'' தெளிவுற அமையும்.

இறவாமை : உலகத்து மொழிக்கு எல்லாம் இறப்பு இயல்பாய் இருக்க, எந்தமிழுக்கு மட்டும் இறப்பு இல்லையாகும். தமிழொடு ஒப்ப வைத்து எண்ணத்தகும் உயர் தனிச் செம்மொழிகள் கிரேக்கம், இலத்தீன், ஆரியம் என்பனவே. இவற்றுள் நந்தமிழ் ஒன்றே அன்றிலிருந்து இன்றுவரை மேம்படுவது. ஏனைய கிரேக்க, இலத்தீன், ஆரிய மொழிகளெலாம் காலக் கொடுமையான் இறந்துபட்டன. அவற்றை அருகிக் காணப்படும் செய்யுளில் காண்பதல்லது வழக்கியலில் காண்டல் ஒல்லாது. ஆனால், தமிழ் ஒன்றே முன்னைப் பழைமைக்கும் பழைமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கி வருவதாம். அஃது இறையோன் போல் யாண்டும் இறவாமை உடையதெனில் அமையும். என்னை,

'' பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களி தெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலக வழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே ''

எனவரும் பேராசிரியர் சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்தாலறிக

அறமுடைமை : உலக மொழிகளில் அறமொழி யெனப்படுவது தமிழ் மொழி ஒன்றே. பிறமொழிகட்கு அச்சிறப்பில்லை. பிறமொழிகளில் அறநூற்கள் உளவாயினும் தமிழில் வழங்கும் அற நூற்கள் போன்று உலகில் எங்கும் இல்லையென்பது மேனாட்டறிஞராய வீரமா முனிவர், பண்டாரகர். போப்பையர் கொண்ட துணிபாம். மொழியாய்வுத் துறைப் புலவர். பர். குண்டெர்ட் என்பாரும் ''* தமிழிலக்கியமே ஏனைய மொழி இலக்கியங்களைக் காட்டினும் அற நூற்களும் அறத்துறைகளும் நிறைந்ததாகக் காணப்படுகின்ற வாதலின், அறம் மலிந்த அம்மொழி அறவம் என்று அழைக்கப்பட்டது போலும் என்று

* கால்டுவெல் ஒப்பிலக்கணம், கழக வெளியீடு , பக்கம் : 20

வகுத்துரைத்தார்". எனவே தமிழெனில் அறமெனப்படுதல் தெற்றெனப் புலப்படுமாறு காண்க. தமிழில் எழுந்த அனைத்து இலக்கியங்கட்கும் அறமே உட்கிடைப் பொருளாய் அமைந்துள்ளது என்ப பெரியோர். இவ்வாறு, பொதுவகையான் எல்லா இலக்கியங்களிலும் அறத்தை ஊடாட விட்ட பண்டைப் புலவர் சிறப்புவகையான் அறத்தையே விதந்து செய்த பனுவல் கீழ்வருமாறு காண்க:— திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறு பஞ்சமூலம், ஏலாதி, முதுமொழிக்காஞ்சி, முப்பால் பிறவுமாம்.

அகச்சுவை உடைமை: தமிழ்மொழியின் கண்காணப்படும் கழக அகத்துறை இலக்கியங்கள் அனைத்தும், வேற்றுமொழி உலகப்பேரிலக்கியங்களோடு ஒப்ப வைத்து எண்ணத் தக்கனவே. ஐங்குறுநூறும், குறுந்தொகையும் கலித்தொகையும் அகத்துறைப்பாக்களுடை அருந்தமிழ் இலக்கியங்களாம். பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு ஆகிய முந்நெடும் பாட்டும் அகத்துறைப் பாற்பட்டவை. இவ்வகத்துறை இலக்கியங்களையெலாம் கண்டு வியவாத அருந்தமிழ்ப் புலவரும், அயல் நாட்ட றிஞரும் இலரே. எனவே, தமிழகத்துறைப் பாக்கள் அயன்மொழி அகத்துறைப் படைப்புகட்கு இளைத்தவல்ல; இணையானவையே. எனினும், நுண்ணறிவினர்க்குத் தமிழின் தன்னேரில் தலைமை புலனாகாமற் போகாதென்க.

இறைமை உடைமை: உலகில்வேறு எம்மொழியிலும் இல்லா அளவிற்குத் தமிழில் மட்டுமே இறைமை (பக்தி) இலக்கியங்கள் பரக்கக் காணப்படுகின்றன. இதனால் தமிழை இறைமை மொழியெனப் பாராட்டுவர் பெரியர். என்னை, "வணிகத்தின் மொழி ஆங்கிலமெனின், தூதின் மொழி பிரெஞ்செனின். காதலின் மொழி இத்தாலியமெனின், மெய்யுணர்வின் மொழி செர்மனியமெனின், உலகில் இறைமையின் மொழி தமிழேயாகும்" என்பர் தனிநாயக அடிகள் ஆதலின். இறைமை உணர்வு பண்டைத் தமிழ்ப் படைப்புகளில் எல்லாம் பயின்று வருவதே. பிற்காலத்தில் இறைமை உணர்வொன்றையே விதந்து தமிழ் நூற்கள் தோன்றியவென்க. பன்னிரு திருமுறைகளும், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், பிரபுலிங்க

(தொடர்ச்சி 58 ஆம் பக்கம் பார்க்க)

சென்ற இதழ்த் தொடர்ச்சி

நூற் சுருக்கம்

பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும்.

மொழிநூற் பேரறிஞர் பண்டித, புலவ, கலைத்தலைவர்.
ஞா. தேவநேயப்பாவாணர் எழுதியது.

மதில் : மதில் புரிசை எனப்பட்டது. புரிதல் – வளைதல், புரிசையுள்ள நகரப் பெயர்களே முதலில் புரி என்னும் ஈறு பெற்றன. கோட்டை என்பதும் வளைதற் பொருளதே.

கோட்டை – கோட்ட(வ). L. Castrum. E caster. Chester (suffixes of place names)

புரம் – புர (வ) OE, burg, burh OS. burg – OHG – burug. ON burg. Gorh - baurgs. E borough. SC. burgh. புரி – புரீ (வ) E. bury. (Sfx. of place name) பாழி — நகர் Gk. polis.

ஓகநூல்.

ஓவுதல் – ஒத்தல், ஒன்றுதல். ஓவு – ஓகு. ஓவு – ஓவம் – ஓகம் – அறிவன் உளத்தில் இறைவனோடு ஒன்றும் ஊழ்கம். (தியானம்).

உகம் என்பது வடமொழியில் யுக என்றும் உத்தி என்பது யுக்தி என்றும் ஆயது போல, ஓகம் என்பதும் அம்மொழியில் யோக என்றாகும். இம்முறை பற்றி ஓகு யோகு எனப்படும்.

ஓகப் பயிற்சி எண்ணுறுப்புகளை யுடையது. அவை ஒழுக்கம் (இயமம்), ஒழுங்கு (நியமம்), இருக்கை (ஆசனம்), வளிநிலை (பிராணயாமம்), புலனடக்கம் (பிரத்தியாகாரம்), நிறை (தாரணை), ஊழ்கம் (தியானம்), ஒடுக்கம் (சமாதி) என்பன

இடைகலை, பின்கலை, சுழிமுனை என்பன வளிநிலைத் தொடர்பான நாடிகளைக் குறிக்கும் தென்சொற்கள். இவற்றையே வடமொழியாளர் திரித்துக் கொண்டனர்.

ஓகநூல் இறந்துபட்டதால் அறுநிலைக்கள(ஷடாதார)ப் பெயர்களும் இறந்துபட்டன. இருக்கைகளின் பெயர்களும் வடமொழியில் பலவாறு திரிக்கப்பட்டும் மொழி பெயர்க்கப்பட்டும் உள. ஆசனம் என்னும் சொல்லே தென் சொல்லின் திரிபாம்.

பண்டைத் தமிழர், மாயம், வசியம், மந்திரக்கட்டு, மகிடி, பேயோட்டல், குறளி, செய்வினை, கரவடநூல், உடல் நூல், காவல் நூல் போன்ற கலைகளையும் வளர்த்து வந்தனர்.

அறிவியல்கள் :

இலக்கணம் – இலக்கியம், இலக்கணம் தென்சொற்களே. இலக்கு என்னுஞ் சொல்லடியாகப் பிறந்தவை. இலக்கணத்திற்கு அணங்கம் என்றும் இலக்கியத்திற்கு அணங்கியம் என்றும் பெயருண்டு.

தமிழ் எழுத்து கீறெழுத்தும், வெட்டெழுத்தும் என இருவகை. முன்னது ஓலை எழுத்து. பின்னது பட்டயவெழுத்து. பட்டயவெழுத்தையே வட்டெழுத்தென்பர். இன்று அச்சிலுள்ள ஓலையெழுத்து தொன்று தொட்டு வருவதே!

இந்திய ஆரியர்க்கு முதலில் எழுத்தில்லை. அவர் மறை எழுதாக் கிளவி எனப்பட்டது. பிராமணர் தமிழ்நாடு வந்தபின் வடமொழியில் நூலெழுதத் தமிழெழுத்தை யொட்டிக் கிரந்த வெழுத்தை அமைத்துக் கொண்டனர். அதன்பின் கி. பி. 10 அல்லது 11–ஆம் நூற்றுண்டில் தேவநாகரி தோன்றிற்று. தேவநாகரியும் தமிழெழுத்தைப் பின்பற்றியதே என்பது கூர்ந்து நோக்குவார்க்குப் புலனாகும்

மொழிநூல் : மொழி நூற்கு வித்தூன்றியவர் தமிழரே. தமிழ்ச் சொற்களை இலக்கண வகைச்சொல் மூன்றும் பொருள் வகைச்சொல் ஒன்றும், சொற்பிறப்பியல் வகைச்சொல் மூன்றுமாக வகுத்திருந்தனர். தவிர, அறநூல், பொருணூல், இன்பநூல், மறைநூல் (Theology) பட்டாங்கு நூல், (philosophy), அளவைநூல், ஏரணம், வானநூல் போன்றவை எல்லாம் தமிழர்மாட்டுத் தோன்றியவையே.

வானநூல் : இருபத்தெழு நாட்களும் எழு கோள்களும் பன்னி ரோரைகளும் குமரித் தமிழர் கண்டிருந்தனர். எழுகோள்களின் பெய ரால் எழுநாட்கிழமையை முதன்முதல் ஏற்படுத்தியவர் தமிழரே. அது பின்னர் உலக முழுவதும் பரவியுள்ளது.

கொள் – கோள். கொள்ளுதல் வளைதல். கொள் – கொட்கு கொட்குதல் சுழலுதல். கொட்பது கோள். கோள்கள் வானில் சுழன்று சுற்றி வரும் தோற்றத்தால் அப்பெயர் பெற்றன.

இராகு, கேது என்பன சாயைகளே. நிறம் பற்றி அவை கரும் பாம்பு செம்பாம்பு எனப்பட்டன. இருத்தல் கருத்தல். இர் – இரா – இராகு. சே - சேது - சிவப்பு. ஒ. நோ : சேது-கேது. செம்பு-கெம்பு.

செவ்வாய் செந்நிறமுள்ளதென்றும், வியாழன் பொன்னிறமுள்ள தென்றும், வெள்ளி வெண்மையானதென்றும், காரி கரியதென்றும் கண்டறிந்தது வியக்கத்தக்க செய்தியாம்.

வியல் - பெருமை. வியல் – வியலன் – வியாழன். விள்ளுதல் – விரிதல். விள் – விய் – வியல்.

பிருகஸ்பதி என்னும் வடசொல் வியாழன் என்பதன் மொழி பெயர்ப்பாயிருப்பதுடன், பெருகு என்னும் தென்சொல்லின் திரிபை நிலைமொழி முதனிலையாகக் கொண்டிருப்பது கவனிக்கத் தக்கது.

பன்னிரு ஓரைப் பெயர்களுள், வடமொழியில் எல்லாப் பெயர்களும், இலத்தீனில் பதினொரு பெயர்களும் தமிழ்ச் சொற்களின் நேர் மொழி பெயர்ப்பே.

மேழம் : முழுத்தல் திரளுதல், முழு – முழா – திரண்ட முரசு. முழா – மிழா – திரண்டமான் (Stag) மிழா – மேழம். திரண்ட செம்மறியாட்டுக்கடா. மேழம் – மேழகம் – ஏழகம் – ஏடகம் – ஏடு- யாடு – ஆடு.

துலாம் : துல்லுதல் – பொருந்துதல், ஒத்தல். துல் – துன். துல் – துலை. — ஒப்பு. இருபுறமும் ஒத்த நிறைகோல். துல் – துலா– துலை போன்ற ஏற்றம். துலா – துலாம் – துலான் — ஒரு நிறை ஒ. நோ: ஒப்பு — துலை. ஒப்பராவி – துலை செய்வோன்.

கும்முதல் – குவிதல். கும் – கும்பு – கும்பம் – கும்ப(வ) மின்– மீன் – மீனம் – மீன(வ).

பழந்தமிழ் நாட்டில் பன்னிரோரைப் பெயர்களே பன்னிருமாதப் பெயர்களாக வழங்கி வந்தன.

மதி – மாதம் – மாச (வ). ஒவ்வொரு பிறை நிலையும் பக்கம் எனப்பட்டது.

பகு – பக்கம். பகு Bhaj (வ) பக்கம் – பக்ஷ(வ) இருபத்தேழு நாட்களும், புரவி, அடுப்பு, ஆரல், சகடு, மான்தலை, மூதிரை, கழை, கொடிறு, அரவு, கொடுநுகம், கணை, உத்தரம், கை, அறுவை, விளக்கு, முறம், பனை, துளங்கொளி, குருகு, முற்றாம், கடைக்குளம், முக்கோல், காக்கை, செக்கு, நாழி, முரசு, தோணி எனப் பெயர் பெற்றிருந்தன.

கணியம்: தொன்று தொட்டுக் கணியத் தொழில் செய்துவரும் தமிழ் வகுப்பான் வள்ளுவன். வள் கூர்மை, வள்ளுவன் – கூர் மதியன்.

கண்ணுதல் – அகக்கண்ணால் பார்த்தல், கருதுதல், மதித்தல். கண்ணியம் – மதிப்பு. கண் – கணி, கணித்தல் – மதித்தல். கணக்கிடுதல், அளவிடுதல்.

கணி – கணிதம் – கணிசம் – மதிப்பு, (Approximation) கணி – கணிகை – தாளம் கணித்தாடுபவள்.

கணி – கணிகன், கணியன் — நாள்கோள் நிலை கண்டு வருங் கால நன்மை தீமை கணிப்பவன் — அனைத்தும் தென்சொற்களே.

கணக்கு: – கள்ளுதல் — பொருந்துதல். ஒத்தல், கூடுதல். கள்ள – ஒக்க. (உவம உருபு)

கள் – களம் — கூடுமிடம். கள் – கள – கண. கணத்தல் - பொருந்துதல், கூடுதல்.

கணத்தல் பொருந்துதல் கூடுதல். கணக்க – போல. கண – கணம் — கூட்டம்.

கணவன் – கூடுகின்றவன். கணக்கு – கூடிய தொகை. அளவு.

கணக்கு, முதலில் கூட்டலை மட்டும் குறித்துப் பின்பு நால் வகைக்கும் பொதுப்பெயராயிற்று.

பேரெண்களில் சில:

குப்பம் – ஆயிரங்கோடி.
கணிகம் – பத்தாயிரங்கோடி.

தாமரை – கோடாகோடி.

சங்கம் – பத்துக் கோடாகோடி.

வாரணம் – நூறு கோடாகோடி.

பரதம் – இலக்கம் கோடிக் கோடாகோடி.

கும்பம், தாமரை, சங்கம், வாரணம் என்பன தூய தென்சொற்களே.

மற்றும் உடற்குறிநூல், புள்நூல், கறைநூல், உளநூல், பூதநூல், நிலநூல், நீர்நூல், புதையல் நூல், கோழிநூல், பரிநூல், யானைநூல், வரலாற்று நூல், திணைநூல், போன்றவற்றையும் தமிழர் வளர்த்து வந்தனர்.

மந்திரம் என்னும் சொல் வரலாறு.

மந்திரம் தென் சொல்லே. தமிழில் தனிப்பட்ட பொலிவொலியின்றேனும் மெலிவலி யிணைந்துவரின் பொலி வொலியாம். எ. டு. தங்கம். நெஞ்சம், பண்டம். முந்திரி. பம்பரம், குன்றம்.

மந்திரம் என்னும் சொல் மன் திரம் எனப் பிரியும். மன்னுதல், கருதுதல். திரம் என்பது திறம் என்பதன் பழைய வடிவம். திரள் என்னும் சொல்லொடு தொடர்புடையது. றகரம் ரகரத்தினும் பிந்தித் தோன்றியது. மன் என்னும் சொல் முன் என்பதன் திரிபு. முன்னுதல்-கருதுதல். முன்னம் — கருத்து. மனம். முன்னம் – முனம் – மனம். ஆங்கில சாகசனியத்திலும் Mun Munan to think.

ஆரிய மொழிக் குடும்பப் பிரிவுகளுள், ஆங்கில சாகசனியத்தை அல்லது கீழ்ச் செருமானியத்தை (Low German) உட்கொண்ட தியூத்தானியம் (Teutonic) கீழையாரியத்தினும் முந்தியதும், வேத மொழியினும் அல்லது சமற்கிருதத்தினும் தமிழுக்கு நெருங்கியதும் ஆகும்.

உகர முதற் சொற்கள் அகரமுதலனவாக மாறுவது இயல்பே.

உகை – அகை (செலுத்து).

குட்டை – கட்டை.

குடை – கடை.

துளிர் – தளிர்.

புரம் – பரம் (மேல்)

புல்லி – பல்லி
முறி – மறி.

இம்முறையிலேயே முன் மன் ஆயிற்று. முன் என்னும் மூல வடிவம் தமிழிலும் ஆங்கில சாகசானியத்திலும் இருக்க, அதன் திரிபாகிய மன் என்பதே இருக்கு வேதத்தில் உள்ளது.

மன் — கருதியறியும் உயிரினம், மாந்தன்;
மன்பதை — மக்கட் கூட்டம்.
Man - Thinking animal.
மனம் – மன(ஸ்) L. Mens. E. Mind.
மன் – மநு(வ) — மநுஷ்ய (வ) — மாந்தன்.

எண்ணும் திண்மை அல்லது கருதுந் திறன் என்று பொருள்படும். மன்திரம் என்னும் கூட்டுச் சொல் மந்திரம் எனத் திரிந்துள்ளது.

ஒ. நோ. மன் – மன்று – மந்து – மந்தை.
முன் – முன்று – முந்து.
பின் – பின்று – பிந்து.
உறுதியான எண்ணம் – மந்திரம்.

மந்திரம் என்னும் சொல்லின் பல பொருள்கள்:

(1) சூழ்வினை, (2) சூழ்வினைக்குழு (3) திருமன்ருட்டு.
(4) சமயக் கொண்முடிபு நூல் (5) படைப்பு மொழி
(6) கட்டுமொழி (7) சாவிப்பு மொழி.
சூழ்வினை செய்யும் அமைச்சன் – மந்திரி.

பேய்களைத் துணைக்கொண்டு படைப்பும்
கட்டும், சாவிப்பும் செய்பவன் } மந்திரக்காரன்.

ஆரிய வேதமந்திரங்கள் இயற்றப்படு முன்னரே தமிழில் மந்திர நூல்கள் இருந்தன.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்பது தொல்காப்பியம்.

சிவநெறியும், திருமால் நெறியும், தமிழர் சமயங்களென்றும், தமிழ் ஆரியத்தின் மூல மொழியென்றும் உண்மையறியப்பட்ட பின் மந்திரம் வடசொல் என ஒருவரும் மயங்கார் என்பது திண்ணம். *

சென்ற இதழ்த்தொடர்ச்சி.

ஊடாப்பொருட்கள் (COLLOIDS)

ஆ. நேசமணி (இந்துக் கல்லூரி, நாகர்கோவில்).

மின்னிழுப்புத் தன்மை முகாமையானதொரு தொழிற்பயனுடைய தாகும். இது புகையிலுள்ள தூய்மையைக் கெடுக்கும் பொடிகளை அப்புறப்படுத்தப் பயன் படுகிறது. ஊடாத் துகள்களின் ஏற்பு அதிற் கலந்திருக்கும் மின் பிரிவைகளினுல் ஏற்படுவதாகும்.

இணைத்திறன் எய்து நிலை (Isoelectic point). :

ஊடாக் கரைசலில் சில வெளிப் பொருட்களைச் சேர்க்கும்பொழுது அஃது ஊடாத் துகள்களின் ஏற்பை மாற்றுகிறது. எ. கா: காடி சேர்க்கப்பட்ட முட்டை வெள்ளை எதிரேற்புடையது. சில காரங்கள் (alkali) இதனுடன் சேர்க்கப்படும் பொழுது அதன் எதிரேற்பு வர வரக் குறைந்து முடிவில் நேரேற்பாகி விடுகிறது. ஆனுல் இரண்டிற் கும் இடைப்பட்ட ஒரு நிலையில் ஊடாத் துகள்கள் ஏற்பையே இழந்து நிற்கின்றன. இந்நிலையே இணைத்திறன் எய்து நிலையாகும். இந்நிலை யில் கரைசலில், இணையான எண்களுள்ள நேரேற்புடைய துகள் களும், எதிரேற்புடைய துகள்களும் முறையே எதிர் மின்தண்டையும், நேர்மின்தண்டையும் நோக்கிச் செல்கின்றன. இணைத்திறன் எய்து கையில் நிலைத்தன்மை (stability) யும், களித்தன்மை (viscosity) யும் மிகக் குறைவாகவும் கட்டியாதல் (coagulation) மிக அதிக மாகவும் இருக்கின்றன.

(எ) உறைதல் (Ceagulation) :

ஊடாக் கரைசலில் மின் பிரிவையைக் கூட்டினுல், ஊடாப் பொருட்கள் உறைந்து விடுகின்றன. இச்செயலே உறைதல் எனப் படும். இஃது ஊடாப் பொருட்களின் ஏற்புகள் அழிக்கப்படுவதாலே தோன்றுகிறது.

"எதிரேற்புகள் கொண்ட மின்னேற்றவணுக்(ions)களே ஊடாப் பொருட்களைக் கட்டியாக்குகின்றன. கட்டியாக்கும் திறன் மின்னேற்றவணுக்களின் இணைத்திற (Valency) னுடன் நேர்" என்பது கார்டி-சூல்சு கொள்கை (Hardy schulze rule) யாகும்.

நஞ்சக் கந்தகம் எதிரேற்புடைத்து. நேரேற்புடைய மின்னேற்ற வணுக்களே இதனைக் கட்டியாக்கும் தன்மையன. மலிவெள்ளி. (Al^{+++}) அதனைக் கட்டியாக்குவதில் வெண்காரத்தை (Ba^{++}) விடவும் திறன் மிகுந்தது; வெண்காரம் உவரியத்தை (Na) விடவும் திற னுடையது. ஏனென்றால் மலிவெள்ளி, வெண்காரம், உவரியம் ஆகிய வற்றின் இணைத்திறன்கள் முறையே 3, 2, 1 ஆகும். மென்றேல் பிரித்த இரும்பு நேரேற்புடைத்து. ஆதலால் எதிரேற்புடைய மின் னேற்றவணுக்களாலேயே அதனைக் கட்டியாக்க முடியும். துத்தத் (So_4^{--}) தின் கட்டியாக்கும் திறன் பாசியத் (Cl)தினதை விட மிகுதியாகும். ஏனெறின் அவற்றின் இணைத் திறன்கள் முறையே 2, 1, ஆகும்.

(அ) காப்பு (Protection):

கரைப்பான் விரும்பி ஊடாப்பொருட்களுடன் கரைப்பான் விரும்பா ஊடாப் பொருட்களைச் (byophobic colloids) சேர்க்கும்போது அது பின்னதை, மின்பிரிவைகளைச் சேர்த்து, கட்டியாகாமற் காக்கிறது. இம்முறையைக் 'காப்பு' என்றும், இவ்வாறு கட்டியாதலைத் தடுக்கச் சேர்க்கப்படும் ஊடாப் பொருட்களைக் காக்கும் ஊடாப் பொருட்கள் (Protective colloids) என்றும் கூறுவர். எ. கா: களி, முட்டை வெள்ளை போன்றவை. பல்வேறு ஊடாப் பொருட்களும் பல்வேறு காப்புத் திறனைப் பெற்றுள்ளன. அவற்றின் காப்புத்திறன்கள் 'சிக்மாந்தியின் பொன்னெண்' (Zlgmondy's Gold number) அள விஞல் குறிக்கப்படும்.

"ஒரு கனக்கீழ் நூறு கோல் (1cc) ஊடாப் பொன் கரைசலில் ஒரு விழுக்காடு (1%) உவரியப்பாசியம் கலந்திருக்கும்போது எத்தனை ஆயிரங்கீழ் எடை (milligrams) காப்பு ஊடாப் பொருள், அதனைக் கட்டியாகாமற் தடுக்கத் தேவைப்படுகிறதோ அதுவே அவ்வூடாப் பொருளின் 'பொன்னெண்' ணகும்" பொன்னெண் குறையக் குறைய காப்புத்திறன் மிகுகிறது. எ. கா: களி, முட்டை வெள்ளை ஆகி யவை குறைவான பொன்னெண்களைக்கொண்டு, உயர்ந்த காப்புத் திறனைப் பெற்றிருப்பது கண்கூடு.

கரைப்பான் விரும்பி ஊடாப்பொருட்களும், கரைப்பான் விரும்பா ஊடாப் பொருட்களும் (Byophilic and Byopholic colloids)

சில ஊடாப்பொருட்கள் கட்டியாக்கப்பட்ட பின், சிதறூடகத்தைக் கூட்டிஞல் பழையபடி ஊடாக் கரைசலாகி விடுகின்றன. இவை

மாறும் ஊடாப் பொருட்கள் அல்லது கரைப்பான் விரும்பி ஊடாப் பொருட்கள் எனப்படும். எ. கா: முட்டை வெள்ளை. மற்றும் சில ஊடாப் பொருட்கள் ஒருமுறை கட்டியான பின் மறுபடியும் ஊடாக் கரைசலாவதில்லை. அவை மாறு ஊடாப் பொருட்கள் அல்லது கரைப்பான் விரும்பா ஊடாப்பொருட்கள் எனப்படும். (எ. கா:) நஞ்சக் கந்தகம், ஊடாப்பொன்.

ஊடாப் பொருட்களின் பயன்கள் :

ஊடாப் பொருட்களாலான மருந்துகள் திறன் வாய்ந்தவை; எளிதில் ஒருமைப்படுவன. ஊடா நீளாஞ்சனம் (Colloidal Antimony) குளிர் காய்ச்சலைப் (malaria) போக்குகிறது. ஊடா வெள்ளியும் பயன்மிக்க மருந்தாகும். இன்னும் ஊடாப் பொருட்கள் தோல் பக்குவப் படுத்தல், புகைப்படத் தட்டுகள் செய்தல், சாயங்கள் செயற்கைப்பட்டு முதலியன ஆக்குதல் போன்ற பலதுறைகளிலும் பயன்படுகின்றன.

பாகுகள் (Gels):

பாகுகள் திண் பொருட்களில் (solids) நீர்மங் (liquids) களால் தோற்றுவிக்கப்படும் ஊடாக் கரைசல்களாகும். எ. கா: வற்றிய களிக்கரைசலைக் குளிர விடும்போது, நீர்மம் முழுவதும் மறைக்கப் பட்டு ஓர் அரை-திண் பொருள் கிடைக்கிறது. இது பாகுபோன் றிருப்பதால் களிப்பாகு (Gelatine gel) எனப்படும். பாகுகளைப் பொதுவாகக் கரைசலொன்றைக் குளிராக்கியோ அல்லது இரட்டைச் சிதைவு முறையாலோ செய்யலாம். எ. கா: உவரிய மணலோடு (Sodium silicate) காடி (acid) ஒன்றைச் சேர்த்தால் மண்காடிப் பாகு (silicic acid gel — திண்பாகு (solid gel) - கிடைக்கிறது. பாகுகளில் இருவகையுண்டு. அவை மீள்வன (elastic), மீளாதன (nonelastic) என்பன. மீளும் பாகுகளை வற்றச் செய்து நீர்மத்தை அதனுடன் சேர்க்கும்போது பழைய நிலையிலாகிவிடும். எ. கா: களி. மீளாப் பாகுகளை வற்றச் செய்து நீர்மத்தை அதனுடன் சேர்த்தாலும் பழைய நிலையை அடைவதில்லை. எ. கா: மண்காடிப் பாகுவைச் சிறிது நேரம் வைத்திருந்தால் சுருங்கி விடுகிறது.

சவுக்காரம் (soap), தோல் மெருகு (boot polish) போன்றவை பாகுவகையைச்சார்ந்தனவே.

ஆங்கில மொழியாக்கம்

THE LAUGHTER OF BEAUTY.

1. THE SEA. BARATHIDASAN.

To the east of the village the great sea lies; and all along the coast, the dunes,— a guilt of sand, coloured and patterned like the fur of the mongoose. The waves lash against that quilt, now rising, now falling – rolling on the sand with joy like gambolling little school boys. O brother, look!

Like snow-white swans at play, the sparkling surf breaks upon the shore – springing up and whirling round, again and again. And then when the waves recade young little crab come fletting about wilh their little legs to sport and dance on the sand. A wondrous sight to see!

They say that there is a calm beyond a storm. True it is ; for here the boisterous waters madly rush against the shore, revolting. But, farther down the deep, quietness reigns. And, lo ! the skies drink from the ocean and the ocean takes on the colour of the skies.

The vast expause of water, the verge of the sea meeting the horizon, and the moving waters stret ching from north to south, ah, to look at them all, my heart rises up on its two wings, mine eyes. Anon, it retreats discouraged, seeing that not two, but a crore of wings are needed to view the whole.

The sun rose above the sea. A spray of gold fell everywhere. Beams of light travel all over space. All along the surface of the roaring waters spreads fast the golden gleam of light. Drink at these sights O brother, these fresh sights which old nature has in store.

Yonder shore looks like a grove and there like a red, ripe fruit the sun is seen beaming over all directions. The clouds struggle with one another to reach that fruit. And as a result of their struggle the black sky becomes crimson; O brother, look!

The young sun rose, directing his anger towards darkness. The sea birds rejoiced clapping their wing-hands in joy. Darkness fled and hid itself. The sun began to scatter golden hues everywhere, gladdening every heart.

The brine and the blue sky are joining hands Thr brimming waters look like a beauteous harp. Musician breeze blows upon the harp strings playing sweet wondrous notes. Listen O brother to the song of the generous sea!

Look! the sun climbs above our heads and sends down red-hot fire. People are oppressed with heat. But then the sea comes to their rescue with its cool, refreshing breeze. The sea helps a cultured life all over the earth. O brother, look at the sea abounding in precious wealth!

The Sea cast off her garment of gold and wore round her waist a saree set with pearls. O brother, go and inquire what it is all about - And look! yonder the beautiful moon pours down her light! Now, hail the sea, O brothee, saying "Live thee Long!"

ம. இலெ. தங்கப்பா.

பொது நூலகங்களில் தென்மொழி வரவழைக்கக்
கையொப்பங்கள் வாங்கி
விடுத்துவிட்டீர்களா ?

பேதைமையுள் பேதைமை.

— தமிழவேள் —

உலகில் பிறக்கின்ற எந்த மாந்தனும் அறியாமையோடுதான் பிறக்கிறான். அவனோடு பிறக்கின்ற அந்த அறியாமை அவனுடைய அறிவு வளர வளரத்தான் அகல்கின்றது. ஆனால் அது முழுமையாக அகன்று விடுவதில்லை. ஒருவன் எவ்வளவுதான் கற்றறிந்தவன் ஆயினும் அவனிடமும் சிறிது அறியாமை இருக்கவே செய்யும். இதனைத்தான் திருவள்ளுவர்,

> "அரிய கற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
> இன்மை அரிதே வெளிறு" — (குறள் 503.)

என்று குறிப்பிடுகிறார். "அரிய பெரிய நூல்களைக் கற்றுக் குற்ற மற்றவராய் விளங்குபவரிடத்தும் ஆராய்ந்து பார்க்குங்கால் அறி யாமை என்பது இல்லாமல் இருத்தல் அருமை" என்கிறார்.

இந்த அறியாமை வேறு, பேதைமை என்பது வேறு. ஒன்றை அறிந்து கொள்ளாமல் இருக்கின்ற நிலை அறியாமை. அறிந்தோ அறியாமலோ கேடானவற்றைக் கைக்கொண்டு ஆக்கமானவற்றைக் கைவிட்டு விடுகின்ற நிலை பேதைமை.

> "பேதைமை என்பதொன்று யாதெனில் ஏதங் கொண்டு
> ஊதியம் போக விடல்" — (குறள் 831).

அறியாமையால் அவ்வளவு தீமை ஏற்படாது. பேதைமையால் ஏற்படும் தீமைக்கோ அளவு இருக்காது. அறியாமை அதனையுடைய வனை மட்டுமே தாழ்த்தும். பேதைமையோ அதனையுடையவனை மட்டுமின்றி அவனைச் சார்ந்தவர்களையும் தாழ்த்திவிடும்.

'பேதைமையுடையவன் தகாத செயல்களைச் செய்வதற்கு நாண மாட்டான். நன்மை தீமைகளை ஆராய்ந்து அறியமாட்டான். தன்னைச் சார்ந்தவர்களிடம் பற்றுக் கொண்டிருக்கமாட்டான். போற்ற வேண் டியவற்றில் ஒன்றையும் போற்றமாட்டான். அவன் கற்றுணர்ந்தவ னாயினும் தான் கற்றுணர்ந்தவற்றைப் பிறர்க்கு எடுத்துரைப்பவ னாயினும் தான் ஒரு நெறியில் நின்று அடங்கி வாழமாட்டான். தான் மேற்கொள்கின்ற எந்தச் செயலையும் அவன் சிக்கலாக்கி விட்டு விடு வான். அவனிடம் செல்வமும் செல்வாக்கும் வந்து சேருமேயானால்

அதனால் அவனைச் சேர்ந்தவர்கள் பசித்துக் கிடக்க, அவனைச் சேராத அயலவர் தாம் வயிறார உண்டு மகிழ்ந்திருப்பர். ஏற்கனவே அறிவு தடுமாறிப் பித்தம் பிடித்து அலைபவன் கள்ளையும் குடித்து மயங்கினால் அவன் செய்கின்ற செயல்கள் எப்படி இருக்குமோ, அப்படித்தான் பேதைமையுடையவனின் கையில் ஒன்று கிடைத்தால் – பேதைமையுடையவனுக்கு ஒரு பதவி கிடைத்தால் – அவனுடைய செயல்களும் வீணானவையாக இருக்கும். பாழானவையாக இருக்கும். அத்தகையவன் தன்வழி வருகின்றவர்கள் பல தலைமுறைகள் அழுந்திக் கிடந்து அல்லல் உறுவதற்கான அளவு துன்பச் சேற்றைத் தான் வாழும் ஒரு தலைமுறையிலேயே உண்டாக்கி விட்டுப் போய்விடுவான்'' என்றெல்லாம் திருவள்ளுவர் பேதைமையுடையவனின் இயல்புகளைப் பற்றிச் சொல்கிறார்.

இவ்வளவும் சொன்ன திருவள்ளுவர் ''பேதைமையுள் எல்லாம் பெரிய பேதைமை என்னவென்றால், தனக்குத் தகாத ஒழுக்கத்தின் கண் விருப்பம் கொண்டு நடத்தலாகும்'' என்கிறார்.

''பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்'' — (குறள் 832).

தன் நெறிக்குப் புறம்பான ஒன்றில் காதல் கொண்டு ஒருவன் தன் நெறியிலிருந்து வழுவி நடப்பது மட்டும் பெரிய பேதைமையன்று. தன் நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் ஒவ்வாத கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் ஒருவன் விருப்பம் கொண்டு செயலாற்றுவதும் பெரிய பேதைமைதான். தனிப்பட்ட ஒருவனிடம் உள்ள பேதைமையானது அவனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் பெருந்தீங்கு விளைவிப்பதைப் போலவே, தன் நாட்டையும் மக்களையும் முன்னின்று நடத்திச் செல்பவனாக இருக்கவேண்டியவனிடம் உள்ள பேதைமையும் அவனுடைய நாட்டுக்கும் மக்களுக்கும் பெருந்தீங்கு விளைவிக்க வல்லதாகும்.

தமிழும் தமிழகமும் தமிழினமும் இன்று சிறப்பிழந்து, உரிமை இழந்து, வாழ்விழந்து இருக்கின்ற நிலைக்குக் காரணமாக இருப்பவை எவையென்றால் ஒன்று கேள் போல் பகை. இன்னொன்று பேதைமையுள் பேதைமை ஆகும். மக்களை வழிநடத்திச் செல்பவர்களான ஆட்சியாளர்கள், தலைவர்கள், எழுத்தாளர்கள்–பேச்சாளர்கள் போன்றவர்களிடம் அமைந்திருக்கின்ற பெரும் பேதைமையால்தான் நம்

மொழியும் நாடும் இனமும் இன்றுள்ள நிலைக்குத் தாழ்ந்து விட்டது என்பது எண்ணிப் பார்ப்போர்க்கு விளங்காமற் போகாது.

தமிழகத்தில் புதிதாக வல்லாண்மை செலுத்த வருகின்ற இந்தி ஒருபுறம் இருக்க ஏற்கனவே வல்லாண்மை செலுத்தி வருகின்ற மொழிகள் சமற்கிருதமும் ஆங்கிலமும் ஆகும். இந்த இருமொழிகளில் ஆங்கிலத்தைக் காட்டிலும் சமற்கிருதமே தமிழுக்குப் பெருங்கேட்டைச் செய்திருக்கிறது என்பது வெள்ளிடை மலை ஆங்கில வல்லாண்மையினும் சமற்கிருத வல்லாண்மையே காலத்தாலும் அளவாலும் பெரியது என்பதும் மறுக்க முடியாத உண்மை. சமற்கிருத வல்லாண்மை தமிழனின் தாய் மொழிப் பற்றை மாய்த்துத் தமிழனைக் கீழ்மகனாக்கியது போல் ஆங்கில வல்லாண்மை செய்யவில்லை. மாறாக, அது தமிழனுக்குத் தாய்மொழிப் பற்றை ஊட்டித்தமிழனைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்திருக்கிறது. தான் யாருக்கும் தாழ்ந்தவன் அல்லன் என்ற உணர்வைத் தமிழனுக்குத்தந்து பிறப்பால் தான் உயர்ந்தவன் என்று கூறிக்கொண்டிருந்தவனை எதிர்த்துப் போராடச் செய்ததே ஆங்கிலக் கல்விதான் என்று சொன்னால் அது மிகையாகாது. அவ்வாறிருக்க முதலில் ஒழிக்கப் படவேண்டுவது சமற்கிருத வல்லாண்மையா? ஆங்கில வல்லாண்மையா? என்று எண்ணிப் பாராமல் பேசுகின்றவர்களையும் எழுதுகின்றவர்களையும் பற்றி என்ன சொல்வது? ஆங்கில வல்லாண்மையை எதிர்த்துக் கொண்டே சமற்கிருத வல்லாண்மைக்குத் துணை போகிறவர்களைப் பற்றி என்ன சொல்வது? வடமொழியில் பல பெருநூல்கள் இருக்கின்றன என்றும் அந்நூல்களில் எவ்வளவோ மெய்யறிவுக் கருத்துகள் நுவலப்பட்டிருக்கின்றன என்றும் கூறித் திரிபவர்களைப் பற்றி என்ன சொல்வது ?

தமிழுக்கே தன் வாழ்க்கை முழுவதையும் ஒப்படைத்துவிட்டதாகச் சொல்லிக் கொள்ளும் ஒரு தலைவர், வள்ளலாரைப் பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறார். அந்த நூலில் அவர் கூறுகிறார். "சமற்கிருத மொழியின் பெயரால் இடைக்காலத்தில் என்ன நடந்திருந்தாலும் சரி, அவை யெல்லாம் பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டன. இன்று சமற்கிருத மொழி இந்துக்களுக்கேயன்றி மாந்தகுலம் முழுவதற்குமே பொதுச் சொத்தாகிவிட்டது" என்கிறார். இப்படிச் சொல்பவர் தமிழ் நாட்டில் வாழும் ஒரு தமிழர் என்பதை நினைத்துத்தான் மனம் நோகவேண்டியிருக்கிறது. சமற்கிருதத்தின் பெயரால் நடந்துவந்த எது, இன்று நடவாமல் இருக்

கிறது? அந்த மொழி மாந்த குலம் முழுவதற்கும் பொதுச் சொத்தாகி விட்டது என்பது மெய்தானு? அந்த மொழி அப்படியாக வேண்டும் என்பது எழுதியவரின் விருப்பமா? இந்திய பெருநிலமக்களைப் பல்லாயிரம் குழுக்களாகப் பிரித்து அது பாழ்படுத்தியது போதாதா? அது உலகம் முழுவதும் வேறு பரவ வேண்டுமா ? உலகம் முழுவதும் பரவ வேண்டிய எந்தக் கருத்தை அந்த மொழியிலுள்ள எந்த நூல் எடுத்துக் கூறுகிறது ?

தமிழ் மொழியில் இன்றுள்ள மிகப் பழைய நூல் தொல்காப்பியம். சமற்கிருத மொழியில் இன்றுள்ள மிகப் பழைய நூல் இருக்குவேதம். தமிழில் மட்டுமன்றி வடமொழியிலும் ஆங்கிலத்திலும் பெரும்புலமை பெற்று விளங்கியவரான மறைமலையடிகளார் இருக்கு வேதத்தையும் தொல்காப்பியத்தையும் ஒப்பிட்டுக் கூறுகிறுர். 'நுனித் தறியப்படும் பொருள் மலிந்து பாகுபாடுற்று நடைபெறும் தொல்காப்பிய முழு முதல் நூலோடு ஒத்துப் பார்க்குமிடத்து ஆரியர்க்கு மிகப் பழையதாயுள்ள இருக்குவேதம் மிகத்தாழ்ந்த தொன்றே யாதல் நடுநிலையாளர்க் கெல்லாம் நன்கு விளங்கும். இருக்கு வேதத்தில் நிரம்பிய பொருள் எல்லாம் ஆரியர் தமக்குரிய ஆடுமாடுகள் பல்கல் வேண்டியும், தாமுறையும் நிலம் செழிக்கல் வேண்டியும், தாம் மக்கள் மனைவியரோடு நன்கு வாழ்தல் வேண்டியும், தியூ, வருணன், மித்திரன், இந்திரன் என்பவரைக் குறையிரந்து பாடின பாட்டுக்களுக்கும் வேள்வி வேட்கும் முறைகள் சிலவுமேயாம்......... இப்பெற்றித்தாய இருக்கு வேதம் ஆழ்ந்த நுண் பொருள் உடைய தொல்காப்பிய நூலோடு ஒப்புப் பெறுதலும் அதனினும் உயர்தலும் இல்லையாதல் தேற்றமேயாம். இதுவேயுமன்றித் தொல்காப்பிய நூலோடு ஒப்புப் பெறும் விழுப்பமுடைய பழைய நூல் உலகத்தில் பரந்து கிடக்கும் எம்மொழியிலும் இல்லை என்பது துணிபொருள்".

இருக்கு வேதத்தில் இன்னும் என்னென்ன சொல்லப்பட்டிருக்கின்றன? மறைமலையடிகளாரே சொல்கிறுர்! "இந்திரன் தன் தந்தையை அவன் கால்களைப் பற்றிச் சுழற்றிக் கீழே அடித்துக் கொன்றமையும் அவன் பசியால் வருந்தியபொழுது நாயின் குடர்களைச் சமைத்துண்டு பசிதீர்த்துக் கொண்டமையும் கூறி, இருக்குவேதம் அவனை உயர்த்திப் பேசுதல் போல் எம் தமிழ்ச் சான்றோர் நூல்களில் ஏதேனும் அவனை உயர்த்திப் பேசக் கண்டதுண்டா?......... மேலும் யமி என்னும் பெண் தேவதை தன் தமயனுகிய யமனைப் புணர முயன்ற கதையும்,

பிரசாபதி என்னும் தேவன் தன் மகளைப் புணர்ந்த கதையும் இழிந் தோரும் அருவருக்கத் தக்க வகையாய் இருக்கு முதலிய ஆரிய நூல் களில் சொல்லப்பட்டிருக்கின்றன ?

இத்தகைய நூல்களை உலகம் முழுவதும் போற்றிப் படிக்கவேண் டுமா ? நாவலர் சோமசுந்தர பாரதியார் சொல்கிறார். "மறை என்ற பெயர் கொண்டுள்ள நூல்களைப் புறக்கணிக்க வேண்டும். மறைத்து வைக்கப்படுவதுதானே மறை ? எதை மறைக்க வேண்டும்? ஒழுக்கக் கேட்டை மறைக்க வேண்டும். அப்படி என்றால் அதில் ஒழுக்கக்கேடு மிகுதியும் உள்ளது என்றுதானே பொருள் ? வேதத்தைத் தமிழில் காட்டுங்கள்! ஏன் இன்னும் மறைத்து வைத்திருக்க வேண்டும் ? மாந்தனைக் கொன்று சாப்பிட வேண்டுமென்று இருக்குவேதம் கூறு கிறது என்பதற்காக நாம் ஏற்றுக் கொள்ளலாமா ? அறிவோடு அஞ்சாமல் எண்ணிப் பார்த்தல் வேண்டும். இழிவானவற்றை விளக்கி வாழவேண்டும்" என்கிறார்.

நம் தமிழ்ச் சான்றோர் தமிழ் நூல்களில் சொல்லியிராத எந்தச் சிறந்த கருத்தையேனும் வடமொழியாளர் தம் நூல்களில் சொல்லி யிருக்கிறார்களா என்றால் இல்லை என்று படித்தறிந்து சொல்கிறார் மறைமலையடிகளார். தமிழர் தமிழ் நூல்களை மட்டும் கற்றால்போதும். வடமொழி நூல்களைக் கற்க வேண்டா என்கிறார். தமிழ் நூல் களுக்கு ஒப்பாகவோ உயர்வாகவோ எடுத்துக் காட்டக்கூடிய நூல் ஒன்றேனும் வடமொழியின் கண் இல்லை என்று திட்டமாகக் கூறு கிறார். அவர் எவ்வளவு அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார் என்று பாருங்கள். "கல்வியறிவென்பது எப்பாலார்க்கும் வேண்டப்படும் உற்ற நற்றுணையேயாக, அது தன்னைப் பிராமணர்க்கு மாத்திரம் வரைந்து சொல்லி ஏனையோர் அது பெற முயலினும் அவரை ஒறுத்து வருத்துக என்று கூறிய மிருதி நூல்கள் என்ன பயனுடையனவாம்? .... நுண்ணறிவானும் மெய்ப்பொருள் ஆராய்ச்சியானும் சிறந்து விளங்கிய தமிழாசிரியர் வடமொழி வேதங்களையும் பிறவற்றையும் கற்பின், அவற்றின் நுண்பொருள் இன்மை பற்றி நகையாடுவர் என்பதனை நன்குணர்ந்து போலும் அம்மிருதி நூல் இயற்றினோர் அங் ஙனம் கூறினர். அவ்வடமொழி நூல் பெற்றி அறிதற் பொருட்டு ஒரு சிலரன்றி மற்றைப் பெரும்பாலோர் தமிழர் அவ்வட நூற்பயிற்சி செய்தல் வேண்டா என்னும் கருத்துடையோம். தமிழில் தொல் காப்பியம் திருக்குறளை உள்ளிட்ட கழக இலக்கியம், பன்னிரண்டு

திருமுறைகள், பதினான்கு சித்தாந்த சாத்திரங்கள் திருவாய் மொழி முதலான அரிய பெரிய நூல்கட்கு ஒப்பும் உயர்வும் உடைய நூல்கள் வடமொழியிற் காணப்படுவதின்மையின் இத்தமிழ் நூற்பயிற்சியே சாலவும் வாய்ப்புடைத்தாம் என்பது கடைப்பிடிக்க. ஆகவே அம் மிருதி நூலாரும் அவரோடொத்த பிறரும் அந்நூல்களைத் தம்மிற் றாமே வைத்து மகிழ்ந்து பாராட்டக் கடவராக."

வள்ளலாரைப்பற்றி நூல் எழுதியிருப்பவர் வடமொழியைத்தாம் பாராட்டுவதோடு அமையாமல் தமக்குத்துணையாக வள்ளலாரையும் இழுத்து வைத்துக்கொண்டு பேசுகின்றார். "வள்ளலார் வடமொழி பயில்வதிலுள்ள இன்னல்களை வெறுப்புக் கலந்த உணர்ச்சியுடன் விமர்சித்தது – அம்மொழியிலுள்ள தத்துவ நூல்களை – தரும நீதிக் கருத்துகளை முற்றினும் புறக்கணிக்குமாறு தூண்டியதாகாது......... அடிகளாரின் அருட்பெருஞ்சோதி அகவல், மகாதேவமாலை, சீவ காருண்ய ஒழுக்கம் – ஆகியவை வடமொழி நூல்களில் உள்ள தத்துவங்கள் நீதிகள் முதலியவற்றைப் பிழிந்தெடுத்த சாறு என்றே சொல்லலாம்!........... அவர் (வள்ளலார்) வடமொழிக்கும் தென் மொழிக்கும் இடையேயும் சமநிலையில் சமரசத்தை விரும்பினர் என்று துணிந்து சொல்லலாம்,......... ஆத்ம ஞானக்கல்வி முழுவதையும் தமிழின் வாயிலாகவே பயில முடியுமென அடிகள் நம்பினாலும் தத்துவ உலகில் பல்வேறு மொழியினரையும் பிணைக்கும் கலாச்சாரப் பொது மொழியாகச் சமற்கிருத மொழியை அவர் ஏற்றுக்கொண்டார்......... வடமொழிச் சொற்கள் கலவாத தனித்தமிழ்ப் பற்று, சமயத்துறையில் சாத்தியமன்று என்பதை அடிகள் உணர்ந்திருந்தார்.........'' என் றெல்லாம் பேசுவதைப் படித்தால் மனம் வேதிக்கிறது. (தொடரும்)

தமிழக விடுதலை இயக்கம்.

நாம் விரைவில் தொடங்க விருக்கும் தமிழக விடுதலை இயக்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டியவர்கள் செப்பமும், உறுதியும், வினையாண்மையுங் கொண்டு, எத்தகைய முடிவுக்கும் கட்டுப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். ஆதலின் உறுப்பினராக விரும்புவார் கல்வி, தொழில், குடும்பம், அகவை, ஈடுபாட்டு அளவு முதலியவற்றைத் தெளிவாக, பெருஞ்சித்திரன், தென்மொழி, கடலூர்–1 என்னும் முக வரிக்கு முடப்பெற்ற பதிவஞ்சலில் விடுக்க வேண்டுகிறேன். பிறவிளக்கம் தென்மொழியில் அவ்வப்போது வரும். – பெருஞ்சித்திரன்.

(40 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லீலை, திருப்புகழ், திருவருட்பா முதலிய சைவ இறைமை நூற்களும்; 'திருநாலாயிரம்' முதலிய வைணவ இறைமை நூற்களும் தமிழின் இறமைக் கடல் நூற்பரப்பை வெளிக்காட்டுவனவாம்.

'திணைபால் பாகுபாடுடைமை' : உலகில் உயர்திணை, அஃறிணை என்னும் இருதிணையும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால் என்னும் ஐம்பாலும் தமிழ்மொழிக் கண்மட்டுமே காணப்படுவன. வேறு எம்மொழியில் தானும் திணைப் பாகுபாடு இல்லை யென்றறிக. பால் பாகுபாடோவெனில், பிற மொழிகளில் செயற்கைத் தென்க. பொருளாழம் நோக்கிப் பால் பகுப்பு முறை கொண்டனர் பழைய தமிழர்; சொல்வகை நோக்கிப் பால் பகுத்தனர் பிறமொழியினர். ஆதலின், தமிழின் திணை, பால் பகுப்பு அறிவிற் குடம் படுவதாயும், பிறமொழிப் பால் பகுப்பு கற்பனைப் படைப்பாயும் பயனற்றுப் போதல் காண்க.

பொருள் உடைமை : உலகில் பிறமொழி அனைத்தும் எழுத்து, சொல்லிலக்கணங்கள் உடையனவாகத் தமிழ்மொழி ஒன்றே எழுத்து, சொல்லிலக்கணங்களோடு பொருளிலக்கணமும் உடைத்தாய் உயர் வுறுவது. எழுத்தும் சொல்லும் கற்றல் பொருளாய்வின் பொருட்டே யாதலின் பொருளிலக்கணம் இல்லா அனைத்துலகப் பிறமொழியெலாம் முழுமை பெறுமாறு யாங்ஙனம்? இக்காரணியம் பற்றியும் மொழி யாய்வுத் துறைப் புலவரும், சமயத் தொண்டாற்ற தமிழகம் புக்க மேலை நாட்டறிஞரும் நந்தமிழை ஒப்பில் மொழியென ஓதியுள்ளன ரென்க.

தொகுப்புரை : இதுகாறும் கூறியவாற்றான், உலகின் முன் மொழி தமிழென்பதும், இறவாதிலங்கும் உயர்தனிச் செம்மொழி அஃ தொன்றே யென்பதும், அறமொழி யெனப்படுவது அஃதல்லது பிறி தில்லை யென்பதும், அதன் அகத்துறை இலக்கியங்கள் உலகப் பேரிலக் கியங்களோடு ஒப்பநின்று உயரவல்லன வென்பதும், இ[illegible] றமை நூற்கள் உடைமையில் வேறு எம்மொழியும் அதற்கொப்பி[illegible]ல்லை யென் பதும், அறிவிற் கிசைந்த திணை, பால் பாகுபாட்டினை அஃதொன்றே பெற்றதென்பதும், பொருளிலக்கணமுடைய ஒரேமொழி [illegible] அஃதேயென் ம் ஒரு சிறிது பெற்றாம்.

எந்நாளோ் இறைவா

மு. மகிழரசன்

சேற்றுக்குள் அகப்பட்ட விலங்காக, அப்பால்
சேரவழி காணுமல் தத்தளித்தேன்! சூறைக்
காற்றுக்குள் சிக்குண்ட சருகாகி ஆடிக்
கலக்குற்றுக் கீழ்மேலாய்க் கலைப்புண்டேன்; கண்ணீர்
ஆற்றுக்குள் பெருக்கத்தின் அலைப்புண்டு நீந்தி
அணுவளவும் மூச்சின்றித் திணறிட்டேன்! நல்ல
மாற்றுக்குத் தானேங்கி மடிவுற்றே உன்றன்
மாணடிக்கீழ் மிதிபடும்நாள் எந்நாளோ இறைவா?

காட்டுக்குள் ஏதிலியாம் கைமகவாய்க் கிடந்து
கருத்தின்றிக் கதறிட்டேன், கடும்பசியில் மெல்லும்
ஆட்டுக்குத் தழையானேன்; அம்புலியின் வாயில்
அகப்பட்ட கன்ருனேன்; ஆயிரத்துக் கோடி
வேட்டைக்கே இலக்காகி வெம்புண்கள் பட்டு
வெருள்மானைப் போலானேன்! வீழ்வென்று விழைந்துன்
வீட்டுக்கு வரவேங்கி வெவ்வுயிரும் வீழ்ந்துன்
வல்லடிக்கீழ் மிதிபடும்நாள் எந்நாளோ இறைவா ?

நெருப்புக்குள் வீழ்ந்திட்ட புழுவாக நெளிந்து
நெஞ்சுக்குள் வெய்துண்டேன்; நிமிர்ந்தோங்கும் துன்பப்
பொருப்புக்கு நேராகப் போய்மோதிக் கொண்டு
புடைபட்டு வீழ்ந்துருண்டேன் பொல்லாத வாழ்வின்
விருப்புக்குள் பிறப்பெடுத்தோ வந்துற்றேன்! ஐயோ!
வீணுக்கு வாடுமுயிர் விடைபெற்று வந்துன்
இருப்புக்குள் இடந்தேடி இடையின்றி ஏங்கி
இணையடிக்கீழ் மிதிபடும்நாள் எந்நாளோ் இறைவா ?

(முன் பக்கத் தொடர்ச்சி)

முடிப்புரை : எனவே தண்டமிழின் தனி உடைமைகள் பழைமையும், இறவாமையும், அறம், அகச்சுவை, இறைமை உடைமையும், திணைபால் பாகுபாடுடைமையும், பொருளுடைமையும் என்பது தேற்றமாம். இத்தன்னேரில் தனிப் பண்புகள் அனைத்தும் உலகில் வேறு எம்மொழிக்கும் அமையாமல் நந்தமிழுக்கு மட்டுமே அமைந்தமை பற்றி உண்மைத் தமிழர் உயர் பேருவகை எய்துவாராக. O

இருட்டுக்குள் தடுமாறி எங்கெங்கோ நடந்தே
இழுப்புற்றேன்; எட்டாத நெடுந்தொலைவில் கண்ணின்
குருட்டுக்குத் தெரிகின்ற மினுமினுப்பைக் கண்டு
குறிப்பாக நடைபோட்டுக் குப்புறப்போய் வீழ்ந்தேன்;
வெருட்டுக்கும் புரட்டுக்கும் வீழ்ந்தெழுந்து சாய்ந்து
வெடவெடத்து வலுவிழந்தேன்; வாழ்வென்ற வேட்கை
மருட்டுக்குப் பணியாமல் மாண்டங்கு வந்துன்
மலரடிக்கீழ் மிதிபடும்நாள் எந்நாளோ இறைவா?

கல்லாலும் அடிபட்டுக் காலொடிந்து போனேன்;
கையொடிந்தேன்; கருத்தாலும் நெஞ்சொடிந்து போனேன்;
சொல்லாலும் அடிபட்டுத் துடிதுடித்துப் பொல்லாச்
சூழ்நிலையால் நெரிபட்டுச் சோர்வுற்றுப் போனேன்;
கொல்லாத கொலைக்களத்தில் கூர்வாளிற் பட்டுக்
குற்றுயிராய்க் குலைவுற்றேன்; கொடுமைக்கோர் எல்லை
இல்லாத இவ்வுலகை விட்டங்கே வந்துன்
எழிலடிக்கீழ் மிதிபடும்நாள் எந்நாளோ இறைவா?

கோடையிலே கொளுத்துகையில் கொப்புளித்து வேகக்
குதிகாலில் நடைபோட்டுக் குடுகுடுவென் றேமுன்
ஓடுகையில் உள்ளம்சோர்ந் துடல்இளைத்துப் போக
ஓர்உணர்வும் இல்லாமல் உயிர்ப்பொடுங்கி ஒருநாள்
பாடையிலே போகின்ற பாழான வாழ்வின்
பாட்டுக்கோ பார்த்திருந்தேன்! ஐயையோ! உன்பொன்
மேடையிலே உறங்கும்நாள் எந்நாளோ இறைவா?
மெல்லடிக்கீழ் மிதிபடும்நாள் எந்நாளோ இறைவா?

நோகின்றேன் என்றிலக்க நூறுமுறை சொன்னேன்;
நோயுற்றே படுத்தரற்றிக் கோடிமுறை உருண்டேன்;
வேகின்றேன் என்றெரியும் வெந்துயருள் வீழ்ந்தேன்;
வெறுப்புற்றேன் என்றெடுத்து வேண்டுமட்டும் சொன்னேன்;
சாகின்றேன் என்றலறிச் சாகாமல் செத்துச்
சலிப்புற்றேன்; சோர்வுற்றேன்; பொன்னுடு நாடிப்
போகின்றேன் என்றவொரு பெருமையிலே வந்துன்
பூவடிக்கீழ் மிதிபடும்நாள் எந்நாளோ இறைவா?

நண்பென்று நினைத்திட்டேன்; நம்பிச்சென் றங்கே
நடுவழியில் என்கழுத்து நெரிபடலை உணர்ந்தேன்
பண்பென்று கடைப்பிடித்தேன் பழித்திடவும் பட்டேன்;
பணிவென்று சமைந்திருந்தேன் பரிந்தெள்ளப் பட்டேன்;
அன்பென்று நினைத்திருந்தேன் கவடுளத்தால் ஆங்கே
அடிபட்டுக் கலுழ்ந்திட்டேன் அம்மம்ம! கொடுமை!
என்பென்றும் உயிரென்றும் எண்ணுமல் வந்துன்
இன்னடிக்கீழ் மிதிபடுநாள் எந்நாளோ இறைவா?

அச்சக அமைப்புக் கடன் திட்டம்

(1-7-66 முதல் (31-7-66) முடிய அலுவலகத்திற்கு வந்த தொகைகள்)

கடன்

க. பத்து உருபா வகை. உருபா எண்

திரு. க. கணேசன், பொறையாறு	10	103

அன்பளிப்பு.

திரு. இளஞ்சித்திரன், மன்னார்குடி வழி :

திரு. இரெ. கிருட்டிணமூர்த்தி பி எசி. மகாதேவப்பட்டினம்	5
திரு. இரா. பாலசுப்பிரமணியன் பி.ஏ.	2
திரு. ப. இராகவன், தமிழாசிரியர்	5
திரு. கே. அரங்கநாதன், ஆசிரியர்	2

(முன் பக்கத் தொடர்ச்சி)

உறவென்று பேசுகையில் உறுபகையைக் கண்டேன்.
உயிரென்று கைகொடுத்தேன் உயிர்ப்பொடுக்கப் பட்டேன்
நெறியென்று பேசுகையில் நெருப்பிலிடப் பட்டேன்.
நேர்மையினைக் காட்டுகையில் நெஞ்சொடுக்கப் பட்டேன்.
நிறையென்று பேசுகையில் நெருப்பிலிடப் பட்டேன்.
நெடுமூச்சு விட்டழுதேன் ஆங்குநெடுங் கதவு
திறவென்று கேட்டழுது திருக்காட்சி பெற்றுன்
திருவடிக்கீழ் மிதிபடும்நாள் எந்நாளோ இறைவா ?

உலகென்று காண்பதெலாம் உன்னடிக்கீழ் இறைவா
உறவென்றும் உன்னிடத்தே உன்னடிக்கீழ் இறைவா
வலிவென்று பெறுவதெல்லாம் உன்னடிக்கீழ் இறைவா
வாழ்வென்று வாழ்வதெலாம் உன்னடிக்கீழ் இறைவா
நிலையாக இருப்பதெலாம் உன்னடிக்கீழ் இறைவா
நிறைவெய்தி மகிழ்வதெலாம் உன்னடிக்கீழ் இறைவா
அலைபாய்ந்தே ஆவலிலே விழும்நெஞ்சும் உடலும்
ஆருயிரும் உன்னடிக்கீழ் உன்னடிக்கீழ் இறைவா !

ஆசிரியர்கள் கூ. ம. தொ. பள்ளி மகாதேவப்பட்டினம்	5
திரு. ஆ. வைத்தியநாதன், ஆசிரியர்	1
திரு. அ. கோ. கலியாணசுந்தரம்	3
திரு. சா. கண்ணையன், ஆசிரியர், வில்லியவரம்பல்	2
திரு. செயராமன், மாகாதேவப்பட்டிணம்	4
திரு. பொ. கிருட்டிணமூர்த்தி, கூடப்பாச்சிக்கோட்டை	1
திரு. சி. ந. வைத்திலிங்கம்	3
திரு. சி. வை. இராமையன்	1
திரு. க. சிங்காரவேலு	1
திரு. பி. காளிதாசு, பரவாக்கோட்டை	2
ஆசிரியர்கள்: மன்ப உல் உலா, உயர்தொடக்கப்பள்ளி கூத்தாநல்லூர்	10
திரு. டி. எச். அரங்கநாதன், தண்ணீர்குன்னம்	1
1-6-66 அன்று கூடப்பாச்சிக்கோட்டையில் நடந்த திருமண நினைவாக	10
திரு. அ. மு. யாசீன், ஆசிரியர், மகாதேவப்பட்டினம்	2
திரு. செ. பழனிச்சாமி பரம்பிக்குளம்	1-20
நம்பியூர் முகவர். திரு. ப. கு. சுப்பையன் அவர்கள் வழி:	
திரு. க. இராமசாமி, நம்பியூர்	2
திரு. கா. வேங்கடாசலம்	1
திரு. ந. முருகையன், சர்வோதயமன்றம்	2
திரு. மா. அரங்கசாமி, காந்திபுரம்	1
திரு. மு. முத்தையா, ஆலியார்நகர்	10
மலையா முகவர். அழ. அகிரிசாமி அவர்கள் வழி.	
திரு. பெ. கோ. மலையரசன், ஈப்போ	50
திரு. வெ. சோமு, எண்ணூர்	5
அவர்வழி:	
திரு. வெ. தினதயாளன்	2
திரு. கோ. க. வேதாசலம்	3
திரு. சே. த. மூர்த்தி	2
திரு. பா. இராசு	3

திருவாளர்கள்: கோ. மோகன்ராசு, ப. பலராமன்,
டி. சீனிவாசன், வே. த. சண்முகம், சி. நடராசன்,
ஆ. திருநாவுக்கரசு, சி. இராமன்,
பி. கே. ஏ. நாராயணன், கி. செயராமன்.
(ஓர் உருபா மேனி) 9

பு. புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றச் செயலாளர்
திரு. பு. கா. பாலசுப்பிரமணியம் 1

அவர்வழி:– திருவாளர்கள்: இரா. ஆறுமுகன், சு. பாலசுப்பிர
மணியம், ஆடலரசு (ஓர் உருபா மேனி) 3

மறைமலையடிகள் மன்றம் 1

விராலிமலை திரு. மு. துரை. ஆ. சொக்கலிங்கம் 10

அவர்வழி:

திரு. முசலை எழிற்செல்வன் 10

திரு செ. பழனிச்சாமி, நீரார்உட்கோட்டம் 5

திருவாளர்கள்: ஆ. முத்தையா, ந. ச. ஞானையா, தியாக
ராசர்கல்லூரி மாணவர்கள். 6

திரு. க. பழனிச்சாமி, அரசர் தமிழ்க் கல்லூரி,
திருவையாறு 2

வேலூர் கந்தசாமி கண்டர் கல்லூரி மாணவர்கள் திரு
வாளர்கள்: செழியன், தமிழரசு நெடுமாறன்,
கடிகைமுத்து, (தலைக்கு ஓர் உருபா மேனி) 4

திரு. வேலு 2

திரு. கோ. சண்முகானந்தம், ஆசிரியர், கோட்டேரி 1

இப்பட்டியலில் வந்த தொகை விளக்கம்.

க. கடன் தொகை பத்து உருபா வகை 10

உ. அன்பளிப்புத் தொகை 196–20

மொத்தம்	206–20
முன்மொத்தம்	6633–44
	6839–64

தென்மொழியின் தெளிந்த கொள்கைகள்.

1. தமிழ் நிலத்துள் தமிழே ஆட்சிமொழி ஆதல் வேண்டும்; மாநில இணைப்பு மொழியாகவும் உலகத் தொடர்பு மொழியாகவும் இருக்கத் தகுதியுடைய மொழி ஆங்கிலமே. இவ்விரு மொழிகளுமே தொடக்கக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரை பயிற்றப் பெறுதல் வேண்டும். இவையன்றிப் பிற கலை, நுண்கலை, தொழில் அறிவியல் முதலிய பல் துறைக் கல்வியும் தமிழிலேயே பயிற்றல் வேண்டும்.

2. தமிழ் நாட்டுள் தமிழர்களுக்காக நடத்தப் பெறும் தமிழ்த் தாளிகைகள், எழுதப்பெறும் நூல்கள் எல்லாவற்றும் தூய தனித் தமிழே வழங்கப் பெறுதல் வேண்டும். இவ்வமைப்பிற் கடிப்படையாக எல்லா முயற்சிகளையும் செய்தல்.

3. தமிழக அரசியல் கட்சிகள் தமிழ் மொழிக்கும், தமிழர்க்கும், தமிழ் நாட்டிற்கும் செய்துவரும் தொண்டில் போலியும், பொய்மையும் கலவா வண்ணம் அவற்றின் நடவடிக்கைகளைக்கூர்ந்து கவனிப்பதுடன் தேவையான பொழுது கண்டிக்கவும் அவற்றை நல்வழியில் திருப்பவுமான நடுநிலைக்குழு ஒன்றினை அமைத்துச் செயற்படல்.

4. தூய தனித் தமிழ் நூல்களையும், பிறநாட்டு அறிவியல் நூல்களையும் தொடர்ந்து வெளியிட்டு வருவதன் வழி மொழியை வளர்த்தலும், மக்களின் பல்வகைப்பட்ட அறியாமையை நீக்குதலும், இவ்வழி உலகத் தமிழரோடும், பிற நாட்டாரோடும் தொடர்பு கொள்ளுதலும்.

5. குமுகாயத் துறையில் சாதிகளையும் அவற்றோடு துணை போவாரையும் அரசியல் துறையில் மக்களை மடமைக்கோ அரசியல் ஆரவாரங்களுக்கோ அழைத்துச் செல்லும் கட்சிகளையும், அறமற்ற ஆட்சியமைப்பையும், பொருளியல் துறையில் செல்வ ஏற்றத்தாழ்வையும், போலிவாணிகப் புனைசுருட்டல்களையும் சுட்டிக்காட்டிக் கண்டிப்பதுடன் இத்துறைகளில் ஏமாற்றமடையா வழி மக்களை எச்சரித்தல்.

6. சிறுபான்மையினரின் மொழி நலம் பண்பாடு இவையுள்ளிட்ட உரிமை கெடாவண்ணம் செப்பமான குடியரசமைப்புக்கு வழியமைக்காவிடில், வடவர்க்கே தனியொரு வல்லாண்மையரசாக இயங்கும் நடுவணாட்சித் தொடர்பிலிருந்து தமிழகத்தை விடுவித்தலும் தமிழ அரசை நிலைப்படுத்தலும்.

7. இவ்வடிப்படைக் கொள்கைகள் என்றும் சிதைந்துபோகா வண்ணம் இவ்வுலகம் உள்ளளவும் நீடித்து நிற்கச் செய்யவும் தொடர்ந்து செயற்படவும் ஒரு நிலையான அமைப்பை அமைத்தலும், அதில் அவ்வக்காலத்து உழைப்புளம் கொண்ட அறிவினரைத் தொடர்பு கொளச் செய்தலும் ஆகும்.

வெளிவந்துவிட்டது!

மொழிப்பெரும் புலவர்

ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ., பி. ஓ. எல்.

எழுதிய அரிய ஆராய்ச்சி மொழிநூல்

THE PRIMARY CLASSICAL LANGUAGE
OF THE WORLD

ஆங்கிலம்

உலக மொழிகளினின்று வேறுபட்ட தமிழ்மொழியின் தொன்மை, முன்மை, தாய்மை, தூய்மை, தனிமை, இனிமை, வளமை, இளமை ஆகிய எட்டுத் தனிப் பண்புகளையும் உலகெலாம் உணர்ந்து கொள்ளுமாறு, பாவாணர் தம் அஃகியகன்ற ஆராய்ந்த புலமை முற்றும் விளங்க ஆங்கிலத்தில் எழுதிய ஈடும் எடுப்பும் அற்ற முழுமையான மொழி நூல்.

விலை உருபா 15

கிடைக்குமிடம்

பாரி நிலையம்

59, பெருவழி (BROADWAY)

சென்னை – 1.